தரமான சுவையான
ஐஸ்கிறீம், குளிர்பானங்கள்
மற்றும்
சிற்றுண்டி வகைகளை
புசித்து இன்புற
ராஜா குளிர்
சுவையகம்
(ராஜா கிறீம் ஹவுஸ்)
36, சந்தோஷம் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி/538)

மக்கள்! ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

ஸ்பெஷல், நட்ஸ், வனிலா
புருட்சலட் ஐஸ்கிறீம், கிறீம்
சர்பத் ஆகியவற்றைச்
சுவைத்து மகிழ்ந்திட
ராஜா குளிர்
சுவையகம்
(ராஜா கிறீம் ஹவுஸ்)
36, சந்தோஷம் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி/538)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 28 வியாழக்கிழமை (11 – 05 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 165

## விடிகாலை வேளையில் அதிரடி

# புளியங்குளம் பொலீஸ் நிலையத்தை புலிகள் தாக்கி அழித்து எரித்தனர்!

### இன்றும் நாளையும் படகுச் சேவை

யாழ்ப்பாணம், மே 11
கிளாலி – பூநகரிப் படகுச் சேவை இன்றும், நாளையும் வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.
காலநிலை சீரில்லாத காரணத்தால் படகுச் சேவை நேற்று முன்தினம் இடைநிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே. (ஒ–3)

## அமெரிக்க ராணுவ உதவிக்கு அமைச்சர்கள் பலர் எதிர்ப்பு

கொழும்பு, மே 11
"அவ்ரோ" விமானங்கள் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளான சம்பவங்களை அடுத்து அவசரமாகக் கூட்டப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் புலிகளைச் சமாளிப்பதற்கு வெளிநாடுகளிடம் இருந்து உதவி கோருவது என தீர்மானிக்கப்பட்டது.
பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை இதனைத் தெரிவித்த போது அமைச்சர்கள் இதற்கு தமது ஆதரவைத் தெரிவித்திருந்தனர்.
எனினும் அமெரிக்காவிடமிருந்து ராணுவ உதவி பெறுவதை அநேகமான அமைச்சர்கள் ஆதரிக்கவில்லை. அமெரிக்காவிடம் ராணுவ உதவி கோருவது குறித்து எந்த ஒரு முடிவையும் எடுக்க வேண்டாம் என்று பெரும்பாலான அமைச்சர்கள் கோரினார்கள் என்று 'சண்டே ரைம்ஸ்" வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.
முக்கியமாக லலித் சமரசமா
[6 ஆம் பக்கம் பார்க்க]

### காங்கேசனில் நிறுத்தப்பட்டிருந்த
## லங்காமுடிதவில் பொருள் இறக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே. 11
கடந்த ஒரு வாரமாக காங்கேசன்துறையில் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த 'லங்கா, முடித' கப்பல் தொடர்பாக இணக்க நிலை ஒன்று எட்டப்பட்டதை அடுத்து அக்கப்பல் நேற்றுக் காலை பருத்தித் துறைக்கு வந்து பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டது.
யாழ். மாவட்டத்திலுள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கவென உணவுப் பொருள்களை கொழும்பில் இருந்து ஏற்றி வந்த இக்கப்பலை காங்கேசன் துறையில் இருந்து கடற்படையினர் நயினாதீவுக்குக் கொண்டுசென்று ஒருதொகை பொருள்களை இறக்கித் தாம் எடுத்ததும் —
அதைத் தொடர்ந்து அக்கப்பல் பருத்தித்துறைக்கு வராமல் காங்கேசன் துறையில் தரித்து நின்றதும் — தெரிந்தவையே.
கப்பலில் இருந்த மீதியான பொருள்களை பருத்தித்துறையில் இறக்குவது தொடர்பாக செஞ்சிலுவைச்சங்க சர்வதேச குழு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட இருசாராருடனும் பேச்சு நடத்தி இணக்க நிலை ஏற்பட்டதையடுத்தே கப்பல் நேற்று பருத்தித்துறைக்கு வந்தது
பொருள் இறக்கும் பணி உடன் ஆரம்பமானது.
[6 ஆம் பக்கம் பார்க்க]

## இன்ஸ்பெக்டர், பொலீஸார் உட்பட 17 பேர் சம்பவத்தில் உயிரிழப்பு

கொழும்பு, மே 11
வவுனியா – அனுராதபுரம் மாவட்டங்களுக்கு இடையில் எல்லைப் புறத்தில் அமைந்துள்ள புளியங்குளம் பொலீஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் போராளிகள் நேற்று விடிகாலை 5-15 மணிக்கு அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.
இத் தாக்குதலின் போது ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட 12 பொலீஸாரும், ஐந்து ஊர்காவற்படையினரும் கொல்லப்பட்டனர்.
பொலீஸ் நிலையம் புலிகளால் கைப்பற்றப்பட்டு, எரிக்கப்பட்டது.

வவுனியாவுக்கு அப்பால் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள்ளுட்பட்ட புளியங்குளம் (ஹெப்பிட்டிக்கொல்லாவ) பகுதிக்குள் ஊடுருவி விடுதலைப் புலிகள் நடத்திய துணிகரமான தாக்குதலில் மேலும் 6 பொலீஸார் காயமடைந்தனர் என்றும் — மற்றும் இருவரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.
இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது பொலீஸார் ஒருவரின் மனைவியும் உயிரிழந்தார்.
பொலீஸார், ஊர்காவலர்கள் ஆகியோரது ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றிச் சென்றனர் என்றும் தெரிய வந்தது.
காயமடைந்த 6 பொலீஸாரும் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ–ஐ–3-4 14)

## போருக்கு மேலும் ரூ. 250 கோடி ஒதுக்கீடு

கொழும்பு, மே. 11
அரசாங்கம் போருக்காக மேலும் 250 கோடி ரூபாவை ஒதுக்கத் தீர்மானித்துள்ளது.
இத்தொகை உதவி வழங்கும் நாடுகள் பல உறுதியளித்த 4 ஆயிரத்து 165கோடி ரூபாவில் 6 சத வீதமாகும்.
இதனிடையே கடந்த மாதம் சுட்டு வீழ்த்தப்பட்ட "அவ்ரோ" விமானங்களின் தற்போதைய பெறுமதி 75 கோடி ரூபாஎன கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.
இதேவேளை, புலனாய்வுப் பிரிவை விருத்தி செய்ய 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் பொலீஸ் அதிரடிப்படையினருக்கு நாலரைக் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ–4)

### கடும் வெப்பம்; 17 பேர் பலி

இஸ்லாமாபாத், மே 11
பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் நேற்று முன்தினம் 17 பேர் கடுமையான வெப்பத்தினால் இறந்தார்கள். சில இடங்களில் வெப்பநிலை 47 பாகை சென்றிகிரேட்டாக உயர்ந்திருந்தது. (ஏ)

## புலிகளின் முகாம்கள் மீது விமான தாக்குதல் ஆரம்பம்

### பிரிகேடியர் முனசிங்கா கூறுகிறார்

கொழும்பு, மே. 11
வடபகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம்கள் மீது தமது விமானப்படைகள் பாரிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.
இது போன்ற பல தாக்குதல்களை அடுத்த சில நாட்களுக்கு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.
ஆனையிறவு முகாமுக்கு தெற்கே பரந்தன் பகுதியில் உள்ள பல முகாம்கள் மீது ஏற்கனவே நடத்தப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.
பரந்தன் பகுதியில் நேற்று முன்தினம் குடியிருப்புப் பகுதிகள் மீது "சுப்பசொனிக்" விமானங்கள் நடத்திய தாக்குதலையே அரசு இவ்வாறு பிரசாரம் செய்து வருகிறது.
இதேவேளை ஆனையிறவு முகாம் படையினர் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளதாக இலங்கை வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஒ–14)

## பூநகரியில் குண்டு வீச்சு நடத்தியதாக அறிவிப்பு

கொழும்பு, மே 11
பூநகரிப் பகுதியில் நேற்று விமானத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.
சீனரகத்தைச் சேர்ந்த எப் 7 ரக விமானங்கள் உயரத்தில் பறந்து தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டது.
இதற்கிடையில் —
விடுதலைப்புலிகளின் வான் தாக்குதலை முறியடிக்கும் வகையில் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [ஒ–3–14]

### முச்சந்தி முரளி



அம்மணி, தன்ரை நிலையை ஒளிவு மறைவின்றி சொல்லிப் போட்டா கண்டியளே... !

### விடுதலைப்புலிகளால் தாக்கியழிக்கப்பட்ட
## 'அவ்ரோ'வில் ரத்வத்த, ஜெரி உட்பட பிரமுகர்கள் பலர் வர இருந்தனர்!

### கடைசி நேரத்தில் பயணம் ரத்தாகி இருந்தது

கொழும்பு, மே 11
விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளான இரண்டாவது "அவ்ரோ" விமானத்தில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த, பாதுகாப்புச் செயலாளர் சந்திரானந்த டி சில்வா, ராணுவ தளபதி ஜெரி டி சில்வா, ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பெண்டி ஆகியோரும் பயணம் செய்ய இருந்ததாகவும் —
கடைசிநேரத்தில் அவர்கள் தமது பயணத்தைத் தவிர்த்துக் கொண்டதாகவும் "சண்டேரைம்ஸ்" வார இதழில் அதன் அரசியல் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.
ஏப்ரல் 27 ஆம் திகதி முதலாவது அவ்ரோ விமானம் தாக்குதலுக்கு உள்ளானது.
அடுத்த நாள் மற்றைய விமானம் தாக்கப்படுவதற்கு முன்னர் இரு விமானங்கள் பலாலியில் இருந்து கிளம்பிச் சென்றிருந்தன.
முதலாவது விமானம்தாக்கப்
(6 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வு திட்டத்தை வெளிப்படுத்தினால் சிங்களவரிடையே கலவரம் ஏற்படும்

### தமிழ் கட்சிப் பிரதிநிதிகளிடம் சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, மே. 11
இலங்கைத் தமிழர் இனப் பிரச்சினைக்கான தீர்வை தாம் ஏற்கனவே தீர்மானித்து விட்டதாகவும் ஆனால் அத்தகைய தீர்வுத் திட்டம் என்ன என்பதை தான் இப்போது வெளியிடப் போவதில்லை என்றும் ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.
நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் சந்தித்தபோது சந்திரிகா இவ்வாறு கூறியதாக தமிழ் எம்.பி ஒருவர் கூறியுள்ளார்.
இனப் பிரச்சினைக்கு தான் வைத்திருக்கும் தீர்வை இப்போது பகிரங்கமாக அறிவித்தால் அது சிங்கள மக்கள் மத்தியில் கலவரம், குழப்பத்தை ஏற்படுத்துமென தாம் அஞ்சுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.
இனப்பிரச்சினைக்கான தீர்வை இப்போது வெளியிட முடியாது என்று கூறிய சந்திரிகா, இத்தகைய தீர்வுத் திட்டத்தை முதல் முதலில் விடுதலைப்புலிகள் இயக்கத்திடம் கையளிக்க விரும்புவதாகவும் கூறியுள்ளார்.
ஆனால் கடந்த 40 ஆண்டு கால சிங்கள அரசியல் தலைமைகள் இது போன்று பல
[6 ஆம் பக்கம் பார்க்க]

### 'அவ்ரோ' விமானம் தகர்ப்பு சம்பவம்:
## பிரிகேடியர் சரத் முனசிங்கா மீது அமைச்சர் அனுருத்த பாய்ச்சல்!

கொழும்பு, மே. 11
இரு "அவ்ரோ" விமானங்களும் புலிகளின் ஏவுகணைத் தாக்குதல்கள் மூலமே சுட்டு வீழ்த்தப்பட்டன.
இவ்வாறு பிரிகேடியர் சரத் முனசிங்கா இரண்டாவது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட பின்னர் — அன்றைய தினமே செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட்டிருந்தார்.
இவ்வாறு தெரிவிக்கப்பட்டது குறித்து அமைச்சர் அனுருத்த ரத்வத்த, பிரிகேடியர் முனசிங்காவை கடுமையான வார்த்தைகளால் கண்டித்தார் என்று "யுக்திய" பத்திரிகை தெரிவித்துள்ளது.
இது குறித்து தெரியவருவதாவது:-
புலிகளால் ஏவப்பட்ட ஏவுகணையினாலேயே முதலாவது விமானமும் இரண்டாவது விமானமும் சுட்டு வீழ்த்தப்பட்டதாக விசாரணைகளிலிருந்து உறுதி செய்யப்பட்டுள்ளதாக முனசிங்கா செய்தியாளர்களிடம் குறிப்பிட்டிருந்தார்.
இச்செய்திகள் பத்திரிகைகளில் வெளியானதும் யுத்தம் தொடர்பான செய்திகளைத் தீர்மானிக்கும் அரசின் விசேட பிரிவு திண்டாட்டத்திற்கு உட்பட்டது. முதலாவது விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக வீழ்ந்து நொருங்கியது என அப்பிரிவு முதல் நாள் தெரிவித்த தகவல்கள் சரத் முனசிங்காவின் அறிக்கை மூலம் பொய்யாக்கப்பட்டது.
இவ்விடயம் [illegible] பிரிவுக்குப் பொறுப்பான
[6 ஆம் பக்கம் பார்க்க]

## சமாதானத்திலிருந்து அரசு தூர விலகிச் செல்கின்றது!

### பி. பி. ஸிக்கு "சண்டே ரைம்ஸ்" செய்தியாளர்

கொழும்பு, மே 11
வடக்கு – கிழக்கு பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்போவதாக அரசாங்கம் கூறினாலும்—
சமாதானத்தில் இருந்து அரசாங்கம் தூர விலகிச் செல்கிறது என்பதே உண்மையான நிலையாகும்.
"சண்டே ரைம்ஸ்" பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.
அரசாங்கம் விடுதலைப் [illegible] ஆரம்பித்ததும் அது சாயான [illegible]பட்டது. சமாதானத்துக்கான முயற்சி தொடங்கப்பட்டதும் ஒரு திருப்பமாக அமைந்தது. ஆனால் இரு தரப்பும் மோதும் நிலை வந்தபின்னர் சமாதானத்தை எதிர்பார்க்க முடியாது அரசாங்கம் சமாதானம் பற்றிக் கூறினாலும் யாருடன் பேசி சமாதானத்தைக் கொண்டு வருவது? — என்று அவர் கேட்டார்.
இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் அரசாங்கம் தோல்வி கண்டுவிட்டதல்லவா? அதற்கு அரசாங்கம் தானே பொறுப்பு என்று பி.பி.ஸி. செய்தியாளர் கேட்டதற்கு —
ஜனாதிபதியும், அரசாங்கமுமே இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.
இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளதால், படையினர் ஆட்சேர்ப்பு, ஆயுதம்
[6 ஆம் பக்கம் பார்க்க]

## 29 லட்சம் ரூபாவுக்கு ஜே. ஆரின் கார் ஏலத்தில்!

கொழும்பு, மே 11
கொழும்பில் நேற்று நடந்த அரசியல்வாதிகளின் ஆடம்பர வாகனங்களின் ஏல விற்பனையில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆடம்பரக் கார் கூடுதல் விலைக்கு விற்பனையானது.
கடந்த அரசு காலத்தில் அரசியல்வாதிகளுக்கு இறக்குமதி செய்த ஆடம்பர வாகனங்களை விற்கும் புதிய அரசின் திட்டத்தின்படி—
கொழும்பில் நேற்று
(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் புலனாய்வுப் பிரிவை முறியடிக்க அரசுக்குத் திட்டம்

## அமெரிக்க நிபுணர்கள் வழங்கியுள்ளனர்

கொழும்பு, மே 11
விடுதலைப் புலிகளை எதிர் கொள்வதற்கும் அவர்களின் தற்போதைய நடவடிக்கைகளுக்கு முகம் கொடுப்பதற்கும் சில தற்காலிக யோசனைகளை அமெரிக்காவைச் சேர்ந்த படை அதிகாரிகள் அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசின் கோரிக்கைக்கு இணங்க அமெரிக்காவில் இருந்து கொழும்பு வந்துள்ள படை அதிகாரிகள் குழுவினர் ''விசேட நடவடிக்கைகள் பிரிவை (Special Operation Unit) சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளதாக கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளை சமாளிப்பதற்கான சில நிரந்தர திட்டங்களை தயாரித்துக் கொடுப்பதில் இக்குழுவினர் தற்போது ஈடுபட்டுள்ளனர் என்றும் —

திட்ட உருவாக்கம் முடிவடைந்ததும் அது பற்றிய முழு அறிக்கையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக்கப்படும் என்றும் இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் துறையினருக்கு இக்குழுவினர் தெரிவித்துள்ள ஆலோசனையின்படி —

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பொட்டு அம்மான் தலைமையிலான உளவுப் பிரிவின் நடவடிக்கைகளை முறியடிக்கக் கூடிய வகையில் ஒரு விசேட உளவுப் பிரிவை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

## அரச வானொலி, ரீ.வியில் மீண்டும் போர்ப் பாடல்கள்!

கொழும்பு, மே 11
அரச வானொலியிலும், ரூபவாஹினியிலும் யுத்தகால பாடல்கள் ஒலி, ஒளி பரப்பப்படுவது மீண்டும் ஆரம்பமாகியுள்ளது

பிரேமதாஸா ஆட்சிக்காலத்தில் பிரபலம் பெற்றிருந்த யுத்தப் பாடலான ''யுத்த பிமே தனிகளே நத்த கிசிதனே'' என்ற பாடலை ரூபவாஹினி கடந்த வாரம் முதன் முறையாக ஒளிபரப்பியது.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் சமாதானத்தை வலியுறுத்தும் பாடல்கள் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் அடிக்கடி ஒலி, ஒளி பரப்பப்பட்டு வந்தன.

''விண்ணில் சிறகடிக்கும் வெண்புறாவே'' என்ற நிரோஷா விராஜினி என்பவரின் தமிழ்ப் பாடல் அவற்றில் பிரபலம் பெற்றிருந்தது

ஆனால் தற்போது மீண்டும் யுத்தத்தை தூண்டும் பாடல்கள் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. (ஜ)


யா/ அச்சுவேலி

**புனித தெரேசாள் மகளிர் கல்லூரி**

பாடசாலை அபிவிருத்தி நிதிக்காக 12-05-95 அன்று நடத்த இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு 16-06-95 பி.ப. 4 00 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

பா. அ. சங்கம்
யா/ அச்சுவேலி புனித தெரேசாள் கல்லூரி

(36595)



# தேவை

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள ஆங்கில மருந்தகத்திற்கு ஆங்கில மருந்து விற்பனவில் மூன்று வருட அனுபவமுடைய ஒருவர் உடனடியாகத் தேவை. தென்மராட்சிப் பகுதியில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு:-
க. நவரத்தினம்
ஸ்ரீ சண்முகானந்தா வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி.

[சி/1194]


## 14-ம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி அ. கமலாதேவி B.A**
(அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)

தோற்றம்: 03 – 01 – 1948 — மறைவு: 15 – 04 – 1981

திதி: 11 — 05 — 1995

எங்கள் நினைவில் நிலைத்திருக்கும் உங்கள் முகம் என்றென்றும் எங்கள் உள்ளங்களில் பதித்திருக்கும். உங்கள் நினைவே எங்கள் இதயங்களை நிறைத்திருக்கும்.

உங்கள் நினைவால் வாடும்
தாயார் சகோதரன், மைத்துனி
மருமக்கள், சகோதரர்கள், சகோதரிகள்,
சிறியதந்தையர்கள், சிறியதாய்மார்கள்,
மாமன்மார், மாமிமார்,
மச்சான்மார், மச்சாள்மார்.

''அக்கா அகம்''
இணுவில்.

(36589)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு: 03 – 03 – 1925



இறப்பு: 11 – 05 – 1987

அமரர்
**மரியாம்பிள்ளை சிமியாம்பிள்ளை**
(முன்னாள் வடமாநில கல்விப்பணிப்பாளர்)

ஆண்டவரின் சந்நிதியில் அனந்தப் பேரின்பம் பூண்டு மகிழ்கின்றீர் ஐயாவே எட்டாம் ஆண்டாக நின் தாள் மலர்கள் அன்புருகிப் பூசித்தோம் எண்டெமக்கு நல்லருளைத் தா.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அஞ்சலந்தாழ்வு புனித ஆரோக்கியமாதா ஆலயத்தில் இன்று (11-05-1995) மாலை 4-30 மணிக்கும், நாளை (12-05-1995) காலை 6-15 மணிக்கும் புனித மரியாள் பேராலயத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

56, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

[8350]

## அரசடி விநாயகர் லட்சார் சனை

யாழ்ப்பாணம், மே 11
கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய லஷார்ச்சனை நேற்று புதன் கிழமை சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்களுக்கு தினமும் மாலை 4 மணியளவில் லட்சார்ச்சனையும், கணபதி ஹோமமும் இடம் பெறும்.

லஷார்ச்சனை இறுதி நாளான இம்மாதம் 19 ஆம் திகதி காலை சங்காபிஷேகமும் மாலை லஷார்ச்சனை பூர்த்திவிழாவும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பஞ்சமுக விநாயகர் பெருமான் திருவீதி உலாவருவார். (ஐ-5)

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், மே 11
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை காலை சங்காபிஷேகம் நடைபெறும்.

மாலை வசந்த மண்டப பூஜையை தொடர்ந்து அம்பாள் வீதியுலா இடம்பெறும். (ஐ-14)

★ ★ ★

மீசாலை ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி தேவஸ்தான அலங்காரத் திருவிழா இன்று வியாழன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவ காலத்தில் தினமும் 'கந்தபுராண' தொடர் விரிவுரையை திரு. த. நாகேஸ்வரன் நிகழ்த்துவார். (ஒ—31)

## மாணவர் எழுச்சி நாள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே. 11
மாணவர் எழுச்சி நாளை ஒட்டி விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு ஒழுங்கு செய்துள்ள வேலணை ஊர்காவற்றுறை கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செண் ஜேம்ஸ் அக்கடமியில் நடைபெறும்

உடுவில் கோட்ட மாணவர் தலைவர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு மருதனாமடம் இராமநாதன் கல்லூரியிலும்—

சண்டிலிப்பாய் கோட்ட மாணவதலைவர்களுக்கான கலந்துரையாடல் முற்பகல் 11 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் இடம் பெறவுள்ளன. (ஐ-14)


**C. C. A.**
கலை, வர்த்தக கல்லூரி
யாழ்ப்பாணம்.

**G.A.Q. 1995**
யாழ்ப்பாணம்

★ பொருளியல் ★
திரு உதயன்
விரிவுரைகள் நடைபெறுகின்றது
செவ்., புதன்., வியா.
(காலை 6-30)

[சி-1189]



**I. A. S**
ஆவரங்கால்

**O/L DAY CLASS**

கடந்த வருடங்களின் பெறுபேறுகளின் சான்று

**பிரிவு II**
ஆரம்பம்: 15-5-95
திங், செவ், வியா, வெள்
காலை 8 மணி – 1 மணிவரை

சனி, ஞாயிறு, தினங்களில் பரீட்சைகளும் மேலதிக வகுப்புக்களும்

கணிதத்தில் சித்தியடைய

**பிரத்தியேக கணிதம்**
ஆரம்பம்: 3-6-95

நேர அட்டவணை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(36596)


### கொழும்பு தமிழ்ச் சங்கம்

## சூழல் பாதுகாப்பு ஓவிய போட்டிக்கு ஏற்பாடு

சூழல்பாதுகாப்பு உணர்வை அனைவருக்கும் அறிவுறுத்தும் வகையில் கொழும்பு தமிழ்ச் சங்கம், சூழல் பாதுகாப்பு ஓவியப் போட்டி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

16—40 வயதுக்கு உட்பட்டவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றலாம்.

சூழல் பாதுகாப்பை வலியுறுத்துவதான இவ்ஓவியங்கள் 18''X16'' அளவுள்ள தாளில் அமைத்தல் வேண்டும்.

ஓவியத்தாளின் பின் புறத்தில் ஓவியரின் பெயர், முகவரி, பிறந்த திகதி போன்ற விபரங்களுடன், தகுதி வாய்ந்த ஒருவரின் உறுதிப் படுத்தலும் அவரின் பெயர் முகவரி பதவி என்பனவும் எழுதப்படல் வேண்டும்.

விரும்பிய வண்ணங்களை பயன்படுத்தலாம்.

ஓவிய ஆக்கங்கள் ஜூன் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் ''பொதுச்செயலாளர், கொழும்புத் தமிழ்ச்சங்கம் இல.7, 57ஆவது ஒழுங்கை கொழும்பு—6'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (ஒ-14)

## கம்பன் விழாவில் இன்று கலை தெரி அரங்கம்

### மாலையில் சிறப்பு கவியரங்கம்

யாழ்ப்பாணம், மே 11
அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் 15ஆம் ஆண்டுக் கம்பன் விழாவின் 3ஆம் நாள் காலை நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு வண. பிதா மரிய சேவியர் அடிகள் தலைமையில் ஆரம்பமாகும்.

குழந்தை ம சண்முகலிங்கம் தலைமையிலான கலை தெரி அரங்கம் நடைபெறும்.

மாலை நிகழ்வுகள் 4-30 மணிக்கு திரு. சி. சிவசரவண பவன் (சிற்பி) தலைமையில் ஆரம்பமாகும்.

மாலை நிகழ்வுகளின் சிறப்பு அம்சமாக காரை. செ. சுந்தரம்பிள்ளை தலைமையில் எண்ணங்கள் விரிந்து எங்கள் இதயங்கள் பேச வண்ணங்கள் தலைப்பாகட்டும் என்ற தலைப்பில் கவியரங்கம் இடம்பெறும். (ஐ-14-111)

### புலிகளின் குரல் வானொலியில்

11 5 1995
**வியாழன் இரவு**
★ 8-02 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8 10 — சித்தமருத்துவ குறிப்புக்கள்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் ''நன்னீர் மீன் வளர்ப்பின் நவீன முறைகள்'' கேள்வி பதில்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — மொழியும் வாழ்வு
★ 8-50 — எங்களின் தேசம்

12 — 05 — 1995
**வெள்ளி காலை**
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40— தாயகப் பாடல்கள்

### தமிழீழ வானொலியில்

**வியாழன் மாலை**
★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-03 — எழுச்சிகீதம்
★ 5-10 புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — இசையும் கதையும்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — பொன் விளையும்பூமி
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள் விளையாட்டு ... தொடர்ந்து கேள்வி பதில்

## மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், மே 11
செல்வன் சண்முகநாதன் சபேசனின் மிருதங்க அரங்கேற்றம் நாளை 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் வைத்திய கலாநிதி து. வி. ஜெயகுலராஜா தலைமையில் நடைபெறும்.

செல்வன் சபேசன் இசைக்கலைமணி திரு கண்ணதாசனின் மாணவராவார். [-14]

## இசைவிழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே. 11
இவ்வார இறுதியில் நடைபெறவிருந்த யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட இசை ஆசிரியர்களுக்கான இசைவிழா பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டு பேரவையின் ஆதரவில் தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம் பெற்று வரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு வி. யோகராஜாவின் வானம்பாடி வில்லிசைக் குழு வழங்கும் ''திருமுருகன் திருவிளையாடல், வில்லிசை நிகழ்வு'' இடம்பெறும்.

அறிமுகவுரையை திரு. சி. சிவலோகம் வழங்குவார். (ஐ-14-173)

## கடவுச்சீட்டு விண்ணப்பம்

நவாலி, மே 11
யாழ் மாவட்டத்தில் இருந்து, கடவுச்சீட்டு பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்களது விண்ணப்பங்கள் யாழ் செயலகத்தினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன

இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனையின் பின் கொழும்பிலுள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. [க-14-100]

## மலத்தியோன் திரி போஷா விநியோகம்

யாழ் மாவட்டத்துக்கென கப்பலில் கொண்டுவரப்பட்ட 100 மலத்தியோன் பெட்டிகள் யாழ் மாநகர சபை, சாவகச்சேரி பருத்தித்துறை சுகாதார அதிகாரி பிரிவுகள் ஆகியவற்றுக்கு யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதே வேளை கப்பலில் கொண்டு வரப்பட்ட திரிபோஷா மாப் பெட்டுக்கள் அடுத்த வாரம் சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

## செஞ்சிலுவை நடவடிக்கை நாடு முழுவதும் நிறுத்தம்

### வடக்கு—கிழக்கில் மட்டும் அனுமதி

கொழும்பு, மே 11
வடக்கு - கிழக்கு தவிர்ந்த நாட்டில் உள்ள அனைத்து ஸ்ரீலங்கா செஞ்சிலுவை சங்கக் கிளைகளின் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க தலைமையகம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

மேற்படி சங்கத்தின் ஆங்கத்துவத்தை சீராக்கும் பொருட்டு அமைச்சர் ஏ. எச். எம் பௌஸியால் நியமிக்கப் பட்ட சங்க நிர்வாகத்துக்கான தற்காலிக குழுவின் சிபார்சுக்கு அமைய இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-க)


**ACCOUNTANCY EXAMS**
**NOV – DEC – 1995**

C. I. M. A. - Stage I
A. A. T. - Level I
(Srilanka)
I. A. B. - (all Stages)

ஆரம்பம்: **14 - 05 - 1995**

★ சிறந்த இலகு விரிவுரைகள்
★ இறுதிவரை உறுதியான வகுப்புக்கள்

விவரங்களுக்கு:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, ST. PETER'S LANE. JAFFNA.

[சி/1382]



**புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்**
K. K. S. வீதி, கொக்குவில்.

**97 A\L**
**கலை, விஞ்ஞான, வர்த்தக**
வகுப்புக்கள் நடைபெறுகின்றன

தமிழ் — S. கண்ணசலிங்கம்
இந்துசமயம் இந்துநாகரிகம் )— காரை, கெங்கா
நாடகமும் அரங்கியலும் )— க. கந்தவேள்

தமிழ் )— ஞாயிறு — மாலை 2-3; திங்கள் — மாலை 5-6
இந்துசமயம் இந்துநாகரிகம் )— சனி ஞாயிறு )— மாலை 5-6
நாடகமும் அரங்கியலும் )— சனி ஞாயிறு )— காலை 6-7

**95, 96 மீட்டல் வகுப்புக்களும்** நடைபெறுகின்றன

(சி/1379)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளர் நலன்புரி சங்கம்
# குருதிக் கொடை இயக்கம்
## முதலாம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ் — 11 - 05 - 1995

## ஆதரவற்றோரின் நண்பன்

★ எமது சங்கத்தின் சேவைத் திட்டங்களில் ஒன்றான குருதிக் கொடை இயக்கம் தனது ஓராண்டு நிறைவினை பூர்த்தி செய்யும் இந் நன்னாளில் குருதிக்கொடை சம்பந்தமான விழிப்பை, தூண்டுதலை ஏற்படுத்து முகமாக ஓர் சிறப்பிதழை வெளியிடுவது சிறந்தது என எமது செயற்குழு தீர்மானித்தது.

பத்திரிகையில் வெளிவரும் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். வடமாநிலத்தின் பிரதான மருத்துவமனையான யாழ். பொது மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளர்களது உறவினர்களிடம் 'அந்நோயாளருக்கு குருதி மாற்றீடு செய்யப்படல் வேண்டும். அதற்காக குருதி வழங்க முன்வாருங்கள்' என விடுதி வைத்தியர் கேட்டுக் கொள்ளும் பொழுது, அந்நோயாளரின் படுக்கையைச் சுற்றி நிற்கும் உறவினர்கள் உடனடியாக அவ்விடத்திலிருந்து மறையும் சந்தர்ப்பங்களையும், குருதி வழங்க இயலாது என பல சாக்குப் போக்குகளைக் கூறுவதையும், குருதியை முன் பின் தெரியாதவர்களிடமிருந்து பணம் கொடுத்து பெறுவதற்கு முயலுவதையும் நாம் நேரடியாகக் கண்டுள்ளோம்.

பணத்துக்காக தமது குருதியை விற்க முனைபவர்கள், சில வேளைகளில் தீய பழக்க வழக்கங்கள் உள்ளவர்களாக இருப்பதும் உண்டு. இதனால் விரும்பத்தகாத நோய்கள் குருதி மூலம் எம் மக்களிடையே பரவ வாய்ப்பு ஏற்படுமென்பதை எம் மக்களில் பலர் அறிந்திருப்பதில்லை. யாழ். பொது மருத்துவமனை குருதி வைப்பக மருத்துவ அதிகாரிகளின் தொடர்ச்சியான கண்காணிப்பினாலும், நெறி தவறாத கண்டிப்பான செயற்பாடுகளினாலும் குருதிக் கொடை பற்றிய அறிவூட்டலினாலும் நோயாளரின் நெருங்கிய உறவினர்கள் சில நாட்களின் பின்னர் முன்வந்து குருதிக் கொடையளிப்பார்கள். இவ் அனுபவங்களினூடாக எமது மக்கள் மத்தியில் குருதிக் கொடை பற்றிய தூண்டுதலை ஏற்படுத்தும் நோக்குடனும் ஆதரவற்றவர்களுக்கு குருதி தேவைப்படும் பொழுது உதவும் நோக்குடனும் எமது குருதிக் கொடை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு வைகாசி 11ஆம் நாள் ஆதரவற்ற நோயாளர் ஒருவருக்கு குருதி மாற்றீடு செய்ய வேண்டுமென்பதற்காக எமது குருதிக் கொடை இயக்கம் தனது முதலாவது குருதிக் கொடையை வழங்கியது. அன்றிலிருந்து அது தனது நோக்கை நிறைவேற்ற இயன்றளவு முனைப்புடன் சேவை மனப்பான்மை உடையவர்களின் ஒத்துழைப்புடன் பாடுபட்டு வருகின்றது. குருதிக் கொடை இயக்கம் மேலும் சிறப்பாக செயற்பட்டு பல ஆண்டு விழாக்களை காண வேண்டுமென இந் நன்னாளில் வாழ்த்துகின்றேன்.

**வைத்திய கலாநிதி சி. சிவபாலன்,**
தலைவர்,
நோயாளர் நலன்புரி சங்கம்.

## மக்களுக்கு வரப்பிரசாதம்

நோயாளர் நலன்புரி சங்கம் இவ் வைத்தியசாலையின் தேவைக்கு நீண்ட காலமாக அநேக விதமான பணிகளை யாற்றி வருகின்றது. இப் பணிகளில் "குருதிக் கொடை" மிகவும் அத்தியாவசியமானதும், முக்கியமானதுமான சேவைப்பணியாகும்.

நோய்வாய்ப்பட்டும் போர்க்கால சூழ்நிலையில் காயமடைந்தும் வரும் நோயாளர்களுக்கு குருதித் தேவை இன்றியமையாததாகும். இத் தேவையின் ஒரு பகுதியை நோயாளர் நலன்புரி சங்கம் ஆற்றிவருவது இப் பகுதி வாழ் மக்களுக்குரிய ஓர் வரப்பிரசாதமாகும்.

சில தட்டுப்பாடான குருதி வர்க்கங்கள் தேவைப்படும் போது அதற்குரியவர்களை அணுகி விளக்கமளித்து குருதி வைப்பகத்துக்கு குருதி பெற்றுக் கொடுப்பது அவர்களின் சேவையின் சிறப்பு அம்சமாகும். நோயாளர் நலன்புரி சங்கம் இப் பணியைத் தொடர்ந்தும் ஆற்றி இவ் வைத்தியசாலையின் குருதித் தேவையை எதிர்காலத்திலும் பூர்த்தி செய்வார்களென நம்புகின்றேன்.

அவர்களுடைய பணி சிறப்புற நடைபெற எனது ஆதரவு என்றும் இருக்குமென கூறுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். நோயாளர் நலன்புரி சங்கம் மேன்மேலும் வளர என் நல்லாசிகள்.

**வைத்தியகலாநிதி**
**இரஞ்சினி இராஜராஜேஸ்வரன்**
பதில் பணிப்பாளர்,
யாழ் பொது மருத்துவமனை.

## ஆதரவு வழங்குவதற்கு எம் மத்தியில் ஓர் அமைப்பு

நோயாளர் நலன்புரி சங்கத்தின் குருதிக் கொடை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு இன்று ஓராண்டு நிறைவெய்துகிறது. இச் சந்தர்ப்பத்தில் இச் சங்கத்தின் பணிகளைப் பாராட்டி ஆசி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். நோயுற்று மருத்துவமனையில் தஞ்சமடைபவர்களைப் பராமரித்து, பணிவிடை செய்து அவர்களுக்கு வாழ்வளிக்கும் அரும்பணியில் இச்சங்கம் ஈடுபட்டுள்ளதை நாம் அறிவோம். இன்றைய போர்க் காலச் சூழ்நிலையில் அடிப்படை வாழ்க்கை வசதிகளின்றி அல்லலுறும் நோயாளரை அன்புடன் அரவணைத்து ஆதரவு வழங்க எம் மத்தியில் ஓர் அமைப்பு உண்டு என நாம் பெருமைப்படலாம்.

மருத்துவமனைகளை தனது பணிக்களங்களாகக் கொண்டு நோயாளர் பராமரிப்பு, நோயாளர் போக்குவரத்து வசதி ஒழுங்குபடுத்தல், குருதிக் கொடை, கஷ்டப் பிரதேச மருத்துவ சேவை முதலிய பல உதவிகளை இச் சங்கம் வழங்கி வருகிறது. காலத்தின் தேவையறிந்து இவர்கள் எம்மக்களுக்கு வழங்கிவரும் சேவை பாராட்டுக்குரியது.

இச்சங்கம் தனது பணிகளை மேலும் விரிவுபடுத்தி எமது பிரதேச மக்களுக்கு தொடர்ந்தும் தனது சேவைகளை வழங்க எனது வாழ்த்துக்கள்.

**இ. சிவானந்தன்.**
கல்விப்பணிப்பாளர் வலயம் - 01
யாழ்ப்பாணம்.

# குருதி கொடை இயக்கம் முதலாம் அகவையில்

நோயாளர் நலன்புரி சங்கம் நோய்த்தவர்க்கு தொண்டு செய்வோம் எனும்இலக்கை தாரக மந்திரமாகக் கொண்டு செயலாற்றி வருகின்றது.

அண்மைக் காலங்களில் தனது நோக்கை நிறைவேற்ற சங்கம் பல பகுதிகளிலும் குறிப்பாக மருத்துவமனைகளில் தனது கிளைகளை நிறுவியும் பல புதிய சேவைத் திட்டங்களை ஆரம்பித்தும் செயற்பட்டு வருகின்றது.

அதில் ஒன்றான குருதிக் கொடை இயக்கம் கடந்த ஆண்டு வைகாசி 11 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக செயற்பட்டு இன்று ஓராண்டை நிறைவு செய்கின்றது தவழத் தொடங்கிய முதல் ஆண்டிலேயே குருதிக் கொடை இயக்கம்.

சேவை மனப்பான்மை உடையவர்களை குருதிக் கொடையளிக்க ஊக்குவித்தல்

மக்களிடையே காணப்படும் குருதிக் கொடை பற்றிய தவறான கருத்துக்களை களைய பாடுபடல்.

குருதிக் கொடை பற்றிய தூண்டுதலை மக்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே ஏற்படுத்துதல்.

குருதிக் கொடையாளர்களை கௌரவித்தல் ஆகிய தனது நோக்கங்களை நிறைவேற்றுவதில் திருப்திகரமாக செயற்பட்டிருக்கின்றது

யாழ். போதனா வைத்தியசாலை குருதி வைப்பகத்தில் சில குருதிப் பிரிவுகள் முற்றாக முடிந்து போகும் சூழ்நிலை ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் ஆதரவற்ற நோயாளர்களுக்கு குருதி ஏற்ற வேண்டிய தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் அப் பிரிவு குருதியை சேவை மனப்பான்மை உடையவர்கள் மூலம் குருதிக் கொடை இயக்கம் பெற்று உடனடித் தேவை கருதி, அச் சந்தர்ப்பங்களில் குருதி வைப்பகத்துக்கு வழங்கி வருகின்றது

அதேவேளையில் காலத்துக்குக் காலம் ஒரு தொகுதி குருதி, சேவை மனப்பான்மையுள்ளவர்களை ஒன்று திரட்டி குருதிக் கொடையளிக்கும் நிகழ்வுகளை ஒழுங்கு செய்வதன் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது

இவ்வாறு எமது குருதிக் கொடை இயக்கம் வேண்டிக் கொண்டதன் பேரில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டோர் பல்வேறு சந்தர்ப்பங்களில் குருதிக் கொடையளித்துள்ளனர் தன்னலமின்றி சேவை மனப்பான்மையுடன் இவர்கள் அளித்த குருதி பல ஆபத்தான நோயாளர்களினதும் பல ஆதரவற்ற நோயாளர்களினதும் உயிர்களைக் காப்பாற்றவும் அவர்களது நோய் குணமடையக் கூடிய வகையிலும் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றது.

இவ்வாறு தன்னலமின்றி சமுதாயத்துக்கு நற்பணியாற்றிய குருதிக் கொடையாளர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் என்பதால் எமதியக்கம் சிறிய நிகழ்வுகளை ஒழுங்கு செய்து அவர்களை பாராட்டி கௌரவித்து வருகிறது. இந் நிகழ்வுகள் குருதிக் கொடை பற்றிய தவறான கருத்துக்கள் களையப்பட்டு ஓர் தூண்டுதல் மக்கள் மத்தியில் ஏற்பட பயன்பட்டுள்ளன

ஓராண்டை பூர்த்தி செய்யும் இந்நாளில் தொடர்ந்தும் குருதிக் கொடை இயக்கம் ஊக்கமுடன் செயற்பட்டு நோய்த்தவர்க்கு தொண்டு செய்ய அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பை நாடி நிற்கின்றது.

**செயற்குழு**
நோயாளர் நலன்புரி சங்கம்

## நோயாளர் நலன்புரி சங்க பணிக்களங்கள்

- ★ நோயாளர் நலன்புரி சங்கம் - பொது மருத்துவமனை, யாழ்ப்பாணம்.
- ★ நோயாளர் நலன்புரி சங்கம் - ஆதார மருத்துவமனை. பருத்தித்துறை.
- ★ நோயாளர் நலன்புரி சங்கம் - மாவட்ட மருத்துவமனை, கிளிநொச்சி,
- ★ நோயாளர் நலன்புரி சங்கம் - மாவட்ட மருத்துவமனை, புதுக்குடியிருப்பு.
- ★ நோயாளர் நலன்புரி சங்கம் - சுற்றயல் மருத்துவமனை. பளை.
- ★ நோயாளர் நலன்புரி சங்கம் - அன்பு மருத்துவமனை, நாகர்கோவில்
- ★ நோயாளர் நலன்புரி சங்கம் - 'மனிதம்' உளநல இல்லம், மானிப்பாய்.

நோயாளர் நலன்புரி சங்கத்தின் சமூக நலத்திட்டங்கள்.
குருதிக் கொடை இயக்கம் வலுக்குறைந்தோர் மறுவாழ்வு இயக்கம்.

**நடுவப் பணியகம்,**
572, கேணல் கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.

**நடுவப் பணியகம்,**
(வன்னி, முல்லை, மன்னார்)
திருநகர், கிளிநொச்சி.

## குருதி, குருதிக் கொடை - ஓர் விளக்கம்

குருதி மனிதன் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான உடற்கூறாகும். இது தோற்றத்தில் திரவநிலையில் உள்ள செந்நிறமான பதார்த்தம் ஆகும். எனவே குருதியை உடலின் பல பாகங்களிற்கும் எடுத்துச் செல்வதற்கு ஒரு தொகுதி தேவையாகும். இத் தொகுதி குருதிச் சுற்றோட்டத் தொகுதி எனப்படும் குருதிச் சுற்றோட்டத் தொகுதியானது இதயம், நாடி, நாளம் மற்றும் மயிர்த்துளைக் குழாய் ஆகிய பகுதிகளைக் கொண்டது. இதயத்தின் தன்னியக்கமான சுருக்க, விரிவு தொழிற்பாட்டினால் குருதியானது இத் தொகுதியினூடாக சுற்றி ஓட்டப்படுகின்றது.

குருதியானது குருதிக் கலங்கள், குருதித் திரவவிழையம் என இரு பெரும் பகுதிகளைக் கொண்டது. குருதிக் கலங்கள் 45 சதவீதமும் திரவ விழையமானது மிகுதி 55 சதவீதமும் ஆகும்.

குருதிக் கலங்கள் பகுதி: 1. செங்குருதி சிறுதுணிக்கை, 2. வெண்குருதி சிறுதுணிக்கை, 3. குருதிச் சிறுதட்டுக்கள் என்பவற்றைக் கொண்டது.

செங்குருதிச் சிறு துணிக்கைகள் குருதியின் செந்நிறத்திற்குக் காரணமான குருதிநிறச் சத்து. அதாவது ஈமோகுளோபின் எனப்படும் பதார்த்தத்தைக் கொண்டுள்ளது. இப் பதார்த்தமானது உடற்கூறுகளிற்கு ஒட்சிசனைக் கொண்டு செல்லும் காவியாகத் தொழிற்படும் வெண்குருதிச் சிறுதுணிக்கைகள் உடலின் நோய் எதிர்ப்புத் தன்மைக்கு உதவுகின்றது குருதித் திரவவிழையமானது குருதிப் புரதம், குருதி உறை பொருள்கள், பிறபொருள் எதிரிகள் என்பவற்றைக் கொண்டுள்ளது. இது உணவுப் பொருள்கள், ஓமோன்கள், கழிவுப் பொருள்கள், மருந்துகள் என்பவற்றை உடலின் தேவையான பகுதிகளிற்கு எடுத்துச் செல்ல உதவும். குருதி உறை பொருள்கள், குருதிச் சிறுதட்டுக்கள் என்பன குருதி உறைதலில் பங்கு கொள்ளும். ஒரு மனிதனில் சராசரியாக 5—6 லீற்றர் குருதி உண்டு. ஈமோகுளோபின் 12—15 கிராம் வீதம் ஆகும்

ஒரு மனிதனிற்கு பல சந்தர்ப்பங்களில் குருதி ஏற்ற வேண்டிய நிலை ஏற்படலாம். 1. உடலில் இருந்து குருதி இழக்கப்படும் வேளையில் இது பின்வரும் சந்தர்ப்பங்களில் ஏற்படலாம். அ. பெருங்காயங்களில் இருந்து குருதி இழக்கப்படல், ஆ. சத்திர சிகிச்சையின் பொழுது (இங்கு சில சந்தர்ப்பங்களில் குருதி இழப்பு ஏற்படலாம்), இ. மகப்பேற்றின் பின்னர்

02. குருதியின் தன்மை, தொழில் என்பன பாதிக்கப்படும் வேளையில் இது பின்வரும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் [அ. செப்ரிசீமியா நிலை. ஆ. பல்வேறு குருதி உறையா நோய்கள். இ. குருதிப் புற்றுநோய் ஈ. குருதிச் சோகைநோய்.

(4ஆம் பக்கம் பார்க்க)

**வைத்திய கலாநிதி க. ராஜசேகரம்,**
குருதி வைப்பக மருத்துவ அதிகாரி,
யாழ் போதனா வைத்தியசாலை.

## எம் கடன் பணி செய்வதே

கொடைகளுள் சிறந்தது குருதிக் கொடை. "குருதி கொடுப்பவரே உயிர் காப்பவர்." எண்ணற்ற உயிர்கள் குருதியின்றி ஊசலாடிக் கொண்டு இருக்கின்ற சந்தர்ப்பத்திலே அந்த விலை மதிப்பற்ற உயிர்களைக் காக்கும் மகத்தான பணிக்கு ஆதரவு அளிப்பதே குருதிக்கொடை இயக்கமாகும். கொடுத்தார்க்கு குறைவில்லை.

"அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்பது குறள். அதாவது உயிர்கள் இடத்து அன்புடையவர்கள் பிறருக்காக தமது எலும்பைக் கூட கொடுப்பார்கள். பண்டைத் தமிழ் மன்னர்களுள் ஒருவராகிய சிபிச் சக்கரவர்த்தி புறாவுக்காக தனது தசையையே வெட்டிக் கொடுத்தான். குமண வள்ளல் தன் தலையையே கொடுக்க முனைந்தான். தமிழர் தம் பண்பாட்டில் கொடை பாரம்பரியமானது. இன்று நேற்று ஆரம்பம் ஆனது அல்ல. தம்மிடம் உள்ள ஒன்றைக் கொடுப்பதே உண்மையான கொடை. எனவே குருதிக் கொடை இயக்கத்தின் புனிதமான பணியை சிந்தித்து செயற்படுங்கள்.

பொருத்தமான சந்தர்ப்பத்தில், பொருத்தமான குருதி இன்றி மரணித்த உயிர்கள் தாம் எத்தனை! எத்தனை? உயிரின் பெறுமதியை நம்மால் அளவிட்டுக் கூற முடியுமா? மகத்தான அந்த உயிரை காக்க வேண்டிய கடமை, தமிழ் மக்களாகிய நம்முடைய கடமை அல்லவா? உயிர்காக்கும் கொடைகளுள் தலையாயது குருதிக் கொடையே. குருதி இன்றி அல்லற்படும் மக்களின் துயர் தீர்க்க ஆரம்பிக்கப்பட்டதே குருதிக் கொடை இயக்கம்.

நோயாளர் நலன்புரி சங்கம் இன்றைய கால கட்டத்தில் எமது மண்ணுக்குத் தேவையான ஒன்று தன்னலம் கருதாது, தளராத சேவையாற்றும் சங்கம். இச் சங்கம் பல்வேறு கிளைகளைக் கொண்டதாய் ஒரு விருட்சம்போல் தமிழீழமெங்கும் கிளை பரப்பி தண்ணிழலளித்து தளராத சேவை செய்து வருகின்றது.

"மக்கள் சேவை மகேசன் சேவை" என்ற ஒரே நோக்கோடு மக்களுக்காக சேவை ஆற்றி வருகின்றது. வலுவிழந்து, ஆதரவற்று, நம்பிக்கை இழந்து, வேதனையில் அல்லற்படும் நோயாளருக்கு இச் சங்கம் நேசக்கரம் நீட்டி அரவணைத்து வருகிறது எனவே பணி செய்பவர்களுக்கு உங்கள் ஆதரவை வழங்குங்கள்!

"நாடு நமக்கு என்ன செய்தது? என்று கேட்காது நாட்டுக்காக நாம் என்ன செய்தோம்? என்று சிந்தியுங்கள்" வீணாக உண்டு உண்டு உறங்குவதே, நமது பணி அன்று நாட்டுக்காக எதையாவது செய்ய முன் வாருங்கள். குருதிக் கொடையையாவது வழங்குங்கள். உங்களுக்கும் ஒரு வரலாறு இருக்கட்டும்.

நோயாளர் நலன்புரிசங்கத்தின் சேவைகள் நம் கண்முன்னே விரிந்து பரந்து இருக்கின்றன. பலன் கருதாத சேவைகள், வறிய நோயாளரை பராமரித்தல், போக்குவரத்து வசதி அளித்தல், ஆதரவு அற்ற நோயாளருக்கு பராமரிப்பு சேவை வழங்குதல், வலுவிழந்தோருக்கு மறுவாழ்வு அளித்தல் ஆகியன அதன் ஏனைய சேவைகள் ஆகும். இச்சேவைகளுடன் இச்சங்கத்தின் பணிகள் முடிவுறவில்லை மேலும் சேவைகளை வழங்கத் தயாராக உள்ளது நோயிலிருந்து எமது மண்ணைக் காப்பதே தனது கடமை என எண்ணி அவசர போக்குவரத்துச் சேவை, மருத்துவமனைகளின் பற்றாக்குறைகளை நீக்குதல் போன்ற பணிகளுடன் ஆண், பெண் மன நோயாளர்களைப் பராமரிப்பதற்கான இல்லத்தையும் நடத்த முன்வந்துள்ளது.

'பணி புரி பலனை எதிர்பாராதே" "எம் கடன் பணி செய்வதே" என்ற கீதா வாக்கியங்களைப் பின்பற்றி பயன் கருதாத பணி புரிந்து வரும் நோயாளர் நலன்புரி சங்கத்தின் பணிகள் ஓங்குக!

வாழ்க! குருதி கொடை இயக்கம்.

**சுப்பிரமணியம் சோமசுந்தரம்**
செயலாளர்
நோயாளர் நலன்புரி சங்கம்

## விழிப்புணர்வு ஏற்படுத்தும் குருதிக்கொடை இயக்கம்

இன்னல்பட்டவர்க்கு இன்முகத்துடன் உதவுவதே தான தருமங்களில் மிக உயர்ந்தது. நோய்வாய்ப்பட்டவர்களுக்கு சேவை செய்வதன் மூலம் நோயாளர் நலன்புரி சங்கமும் இத்தகையதோர் உன்னத பணியினை மேற்கொண்டுள்ளது. தமிழீழ குடிமக்கள் எவரும் நோயினால் வாடும் பொழுது அவர்களுக்கு நிதி பொருள், உடல், ஆத்மா, உதவியுடன், வேறு உதவிகளும் தேவை என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். நோயால் அவதியுறும் ஒருவர் இவையின்றி வாடும் பொழுது அதனைப் பார்த்துக் கொண்டு நாம் வாழாவிருக்க முடியாது. இத்தகைய உதவிகளை நோய்த்தவர்க்கு வழங்கும் ஓர் அமைப்பாக நோயாளர் நலன்புரிசங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் செயற்பாடுகள் தற்போது தமிழீழத்தின் பல பகுதிகளுக்கும் விரிவடைந்து சிறப்பாக நடைபெறுவது பாராட்டப்பட வேண்டியது எமது மக்கள் மத்தியில் குருதிக் கொடை தொடர்பாக பல தவறான அபிப்பிராயங்கள் நிலவுவதும்—இதனால் குருதிக் கொடை விடயத்தில் நோயாளர்களின் நெருங்கிய உறவினர்கள் கூட பின்னிற்பதும் எம்மக்களின் பல உயரிய பண்புகளுள் ஒரு நெருடலாகவே இருந்து வந்துள்ளது

இதனை உணர்ந்து கொண்டு நோயாளர் நலன்புரி சங்கம் தனது பல்வேறு செயற்பாட்டு விரிவாக்கங்களில் ஒன்றாக சென்ற ஆண்டு ஆரம்பித்த குருதிக்கொடை இயக்கம் தனது நோக்கத்தை சிறப்பாகச் செயற்படுத்துகிறது என்பது எவரினது மனதிற்கும் நிறைவு தரும் என்பது உறுதி.

ஓர் ஆண்டு காலப் பகுதியில் குடாநாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவதிலும் பலரைக் குருதிக்கொடையில் முன்மாதிரியாகத் விளங்கச் செய்வதிலும், இவர்கள் வெற்றி கண்டுள்ளார்கள். மேலும் வைத்தியசாலைக்கு பல்வேறு தேவைகளுக்காக குருதி மிக அவசரமாக தேவைப்படும் சந்தர்ப்பத்தில் இரவு பகல் பாராது குருதிக் கொடையாளர்களை ஒழுங்கு செய்து அரிய சேவையாற்றியுள்ளார்கள்.

குருதிக் கொடை இயக்கத்தினர் தமது முதல் ஆண்டை நிறைவு செய்யும் இச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எமது பாராட்டையும் அதே சமயம் அவர்கள் தமது பணியை மேலும் சிறப்பாக செயற்படுத்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வைத்தியகலாநிதி நா. அருள்**
பொறுப்பாளர்
தமிழீழ சுகாதார சேவைகள்

# நோய்த்தவர்க்கு தொண்டு செய்வோம்

விளம்பர இல: (சி/88)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சொனி, சன்யோ, ஹிற்றாச்சி, ரெலிவிஷன்கள், "Kemble" பியானோ, Air Conditioner, மரத்தளபாடங்கள், ஒற்றைமாட்டு ரயர் வண்டில் முதலியன "டாஸ் கொம்ப்ளெக்ஸ்" (மக்கள் வங்கி அருகில்), பிரதான வீதி, யாழ்ப்பாணம். [8525]

இரண்டு மாதம் நிரம்பிய பூச்சி அகற்றப்பட்ட கறுப்பும், கறுப்பும் வெள்ளையும் கலந்த நல்ல இன அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. இல. 50, வைமன் வீதி, யாழ்ப்பாணம். [36590]

### விற்பனையாகிறது

மார்க்கா நிறுவன வெளியீடுகளான பொருளாதாரக் கொள்கை, அபிவிருத்தி மாதிரிகள், சனநாயகம் என்றால் என்ன? சந்தைப் பொருளாதாரம் என்றால் என்ன? விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம் யாழ்ப்பாணம். [சி-1365]

### தமிழ் கம்பியூட்டர்

தமிழ் கம்பியூட்டர் மகசின் கணிப்பொறி மாத இசழ் விலை 40/-. வெளிவந்து விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-1370)

### VENUS ANTENNA

To View Ruppavahini, Madras Programmes. Fixing Venus Antenna Repairing Antennas, Radios, T.V-Decks, Clocks and Watches Venus Dilka Watch and Radio Works 284: Stanley Road [Ariyakulam Junction] Jaffna. Branch, Kandy Road, Chavakachcheri [C-1351]

### இன்று செவ்வாய் மாற்றம்

ஐந்து மாத கால நீச வக்கிர செவ்வாய் சஞ்சாரம் இன்றுடன் முடிவடைவதால் சமாதான முயற்சிகள் காலாவதியாகின்றன. இன்று தொடக்கம் செவ்வாய், சனி, வியாழன் ஒன்றுக்கொன்று சதுரப்பார்வைகள் யுத்த நடவடிக்கைகளைத் தீவிரமாக்கும். சத்யா, கட்டுடை. [8345]

### துர்க்கா திருமண சேவை

மணமக்கள் இருபாலாரும் உண்டு. தொடர்புகொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 'வளர்மதி இல்லம்', கே. கே. எஸ். றோட், மல்லாகம். [8346]

### MATHS, ENGLISH

O/L 95 Distinction, Credit பெறுபேறடைய ஆரம்பத்தில் இருந்து விசேடமாக B.Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும். தினமும் காலை 6-00 – 8-00, பிற்பகல் 3-00 — 5-00. தேவைப்பட்டால் மாலை 6-00—8-00 வரை. இல. 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [36592]

### தவறிவிட்டது

5-5-95 இரவு சுளிபுரத்திலிருந்து அரை மைல் தூரத்தில் முக்கிய ஆவணங்களுடன் ஒரு Bag தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 6841 நம்பர் உள்ள இராஜரட்ணம் சாரதி, மயிலங்காடு, சுன்னாகம் என்ற விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [8347]

---

### BITSMANS

கல்வி நிறுவனம்

மானிப்பாய்

**A/L 97**

அளவையியல்

S. S. மனோகரன்

ஆரம்பம்:
11 – 05 – 1995
வியாழன் 5-00 p.m.

நேர அட்டவணை
செவ். வியா. 5-00

[சி-1177]

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**தொழில் நுட்பவியலாளர் தரம் II பிரிவு 'பி' பதவிக்கான பரீட்சை**

**13-05-95ஆம் திகதி**
[சனிக்கிழமை]

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்படி பதவிக்கான கல்வித் தகைமைகளில் தற்பொழுது மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளமையால் முன்னர் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்பட்டவாறு மேற்குறிப்பிட்ட பதவிக்கான பரீட்சை 1995-05-13 அன்று நடைபெறமாட்டாதென்பதை அறியத் தருகின்றேன்.

இப்பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட 1994-12-05ஆம் திகதியிடப்பட்ட விளம்பரம் இதனால் இரத்துச் செய்யப்படுகின்றது.

–பதிவாளர்.
யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1995-05-08

(சி/1180)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 02 – 07 – 1923

உதிர்வு: 23 – 04 – 1994

**திருவாளர் முருகேசு தம்பிமுத்து**
[ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர்]

திதி: துவாதசி 11 – 5 – 95

மறைந்தும் மறையாத பாசத்தின் உறைவிடமே அன்பின் திருவுருவமாய்; மனிதருள் மாணிக்கமாய், எங்களை யெல்லாம் வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வம் மறைந்து ஒருவருடமாகியும் ஆற்றமையால் தவிக்கின்றோம். மறைந்தும் மறையாமல் எமக்குள் இருந்து வழிகாட்டு எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய கண்ணீர் பூக்களால் அர்ச்சிக்கின்றோம்.

மனைவி பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

தம்பிதாவத்தை,
பொலிகண்டி, பருத்தித்துறை

(36582)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து தொழிநுட்ப உத்தியோகத்தர் தரம் II பிரிவு 'பி' பதவிக்கான விண்ணப்பங்கள் 1995 – 06 – 09 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**சம்பள அளவுத் திட்டம்:**

ரூபா 2,890 — 10X55 — 7 X 65 — 3,895/- மாதமொன்றுக்கு.

**தகைமைகள்:**

இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் 05 திறமைச் சித்திகளுடன் க. பொ. த (சாதாரண தர) தேர்வில் ஆறு பாடங்களில் சித்தி திறமைச் சித்திகளுள் கணிதம், விஞ்ஞானம் என்பன அடங்கியிருத்தல் வேண்டும் அத்துடன் க.பொ.த (உயர்தர) தேர்வில் விஞ்ஞான பாடங்களில் 3 பாடங்களில் சித்தி.

**வயது:**

40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

**தெரிவு:**

உளச்சார்பறித் தேர்வின் மூலமும் நேர்முகப் பரீட்சையின் மூலமும்.

**குறிப்பு:**

தொழில் நுட்ப/உத்தியோகத்தர் சேவையின் 'பி' பிரிவின் கீழான நியமனம் பெறுபவர் முதலில் ரூபா 2 890/-, மாதாந்த நிலையான சம்பளத்தில் மூன்றாண்டுகளுக்கு பயிலுநர் தொழில் நுட்ப உத்தியோகத்தராக நியமனம் பெறுவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்தியபின்னர் இப் பல்கலைக்கழகத்தில் தாபனக்கிளை பிரதிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக் கட்டளை/காசோலைக் கட்டளையுடன் 23X10 ச மீ. அளவுடைய சுயமுகவரியிட்ட ரூ 2/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும் விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு:**

விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் கொழும்பு 13, ஆட்டுப்பட்டித் தெரு, 154 ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாண கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

– பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1995 – 05 – 08

[சி 1181]

---

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

வட்டு. வடக்கு சிவனொளி கி. அ. சங்க வளர்ச்சி நிதிக்காக 14 – 09 – 94 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படாது 07 – 05 – 95 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற இலக்கங்கள்:

1 ஆம் பரிசு:- இல 939
2 ஆம் பரிசு:- இல 350
3 ஆம் பரிசு:- இல 895
ஆறுதல் பரிசுகள்:- 672, 908, 125, 498, 577

– நிர்வாகம்
சிவனொளி கி. அ. சங்கம்,
வட்டுக்கோட்டை.

[சி-1381]

---

### அகில இலங்கை கம்பன் கழகத்தின்

# கம்பன் விழா - 1995

## மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள்
## (11 - 05 - 1995) வியாழக்கிழமை

### காலை 9-30 மணி முதல்

★ மங்கள விளக்கேற்றல்
திரு. திருமதி க. பாலசிங்கம் அவர்கள்

★ கடவுள் வாழ்த்து
சங்கீத வித்துவான்
திருமதி சக்திதேவி சிவகுமார் அவர்கள்

★ கம்பன் வாழ்த்து

★ வரவேற்புரை

★ தலைமையுரை
வண. பிதா நீ. மரியசேவியர் அடிகள்
(யாழ் திருமறைக் கலாமன்றம்)

★ தொடக்கவுரை
'இயலிசை வாரிதி'
பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள்

★ வாழ்த்துரை
திரு. மன்னவன் கந்தப்பு அவர்கள்
(தலைவர், வடமராட்சிக் கம்பன் கழகம்)

**கருத்தரங்கம்**

★ தலைவர்
இலக்கண வித்தகர்
இ. நமசிவாயதேசிகர் அவர்கள்

பொருள்: **'கம்ப சூத்திரம்'**

"உயிரென உலாயதன்றே"
திரு. க. சொக்கலிங்கம் M A.

"அலகிலா விளையாட்டு"
திரு. கே. கே. சோமசுந்தரம் B. A.

"வேறுபாடு உற்ற வீக்கம்"
திரு. இ. ஜெயராஜ்

### மாலை 4-30 மணி முதல்

★ மங்கள இசை
திரு. இ. சேதீஸ்வரன்
திரு. கே. ஆர் புண்ணியமூர்த்தி
திரு. த. உதயசங்கர் குழுவினர்

★ மங்கள விளக்கேற்றல்
திரு. திருமதி நா. அப்புலிங்கம் அவர்கள்
(லிங்கம் குளிர் அகம், யாழ்ப்பாணம்)

★ கடவுள் வாழ்த்து
"இசைக்கலைமணி"
செல்வி ராதிகா சுப்பிரமணிய ஐயர் அவர்கள்

★ கம்பன் வாழ்த்து

★ வரவேற்புரை

★ தலைமையுரை
திரு. சி. சிவசரவணபவன் M A. (சிற்பி) அவர்கள்
(முன்னாள் அதிபர், யா / வைத்தீஸ்வராக் கல்லூரி)

★ தொடக்கவுரை
பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்கள்
(தலைவர் உளநல மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

★ வாழ்த்துரை
திரு ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள்
(ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி)

**கவியரங்கம்**

★ தலைவர்
கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை அவர்கள்

பொருள்:
**எண்ணங்கள் விரிந்து**
**எங்கள் இதயங்கள் பேச**
**வண்ணங்கள் தலைப்பாகட்டும்**

| | | |
|---|---|---|
| சிறப்பு | — | திரு. ச. முகுந்தன் |
| மஞ்சள் | — | திரு. த ஜெயசீலன் |
| சிவப்பு | — | திரு த சிவசங்கர் |
| பச்சை | — | திரு ஜெ கி. ஜெயசீலன் |
| நீலம் | — | கல்வயல் திரு. வே குமாரசாமி |
| வெள்ளை | — | திரு. நாவண்ணன் |
| ஊதா | — | திரு. பொன். கணேசமூர்த்தி |
| மண்ணிறம் | — | திரு பா. சத்தியசீலன் |

**ஆடல் வேள்வி**

✶ இராமாயணக் காட்சிகள் ✶

● வழங்குவோர்
மானிப்பாய், "கலைக் கோயில்"
திருமதி லீலா செல்வராஜாவின் மாணவிகள்

★ நட்டுவாங்கம்
திருமதி லீலா செல்வராஜா

★ பாட்டு
இசைக் கலைமணி வர்ண, இராமேஸ்வரன்

★ மிருதங்கம்
இசைக் கலைமணி க. கண்ணதாசன்

★ வயலின்
சங்கீத வித்துவான்
எஸ். வெங்கடேஸ்வர சர்மா

[சி-1183]

---

(சிறப்பிதழ் தொடர்ச்சி)

## தன்னலம் கருதாத உயிர் காக்கும் சேவை

நோயாளர் நலன்புரி சங்கத்தினர் 'குருதிக் கொடை' இயக்கத்தினை ஆரம்பித்து மகத்தான சேவையாற்றி ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்வது உள்ளத்திற்கும், உணர்விற்கும் நிறைவளிக்கின்றது.

ஆதரவற்று ஏங்கித் தளர்ந்துவரும் நோயாளர்களுக்கு முக்கியமாக ஏழைகளுக்கு உதவும் வகையில் யாழ். பொது மருத்துவமனை குருதிவைப்பகத்திற்கு குருவி போலச் சிறிது சிறிதாகக் குருதி சேர்த்துக் காலந்தோறும் நோயாளர் கண் கலங்க விடாது அவரவர்க்கேற்ற வகையில் அமைந்த குருதியினை வழங்குவதன் மூலம் இவ்வியக்கம் செய்யும் அரும் பெரும்சேவை சொல்லுந்தரமன்று. இவர்களின் தன்னலம் கருதாத உயிர் காக்கும் சேவை மேன்மேலும் தொடர எனது இனிய வாழ்த்துக்கள்.

**திருமதி பத்தினியம்மா திலகநாயகம்,**
மேலதிக அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

## குருதி, குருதிக் கொடை..

[3ஆம் பக்கத் தொடர்ச்சி]

03. குருதியின் உற்பத்தி பாதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் இது பல்வேறு வகையான குருதிச் சோகை நோய்களில் ஏற்படும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் குருதி வைப்பகம் கையிருப்பிலுள்ள குருதியையே உடனடியாக பயன்படுத்த முடியும். எனவே குருதிவைப்பகத்தில் குருதியின் கையிருப்பு மிக மிக அவசியமான ஒன்றாகும். குருதி ஏற்ற ஒழுங்கு செய்யும் பொழுது நாம் குருதிக் கொடை செய்கின்றோம் என்று அனேகமான நோயாளர்களின் உறவினர்கள் கூறுகின்றார்கள் ஆனால் இது நடைமுறைக்கு புறம்பான விடயம் ஏனெனில் குருதி ஏற்றும் தேவை எப்பொழுது ஏற்படும் என்பதை சரியாகக் கூற முடியாது அதே வேளையில் எடுக்கப்படும் குருதியை உடனடியாக நோயாளிக்கு ஏற்ற முடியாது ஏனெனில் இக் குருதியானது பல ஆய்வுகூட பரிசோதனைகள் மூலம் நோயாளருக்கு தகுதியானது என்று உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இவ்வாறான தாமதத்தினால் நோயாளர் மரணம் அடையும் நிலை ஏற்படலாம்.

எனவே ஒரு நோயாளருக்கு குருதி ஏற்ற வேண்டுமென மருத்துவர்கள் கூறும் பொழுதே அவரின் உறவினர்கள் குருதிக்கொடை செய்ய முன்வர வேண்டும். மற்றும் குருதிக் கொடை செய்யத் தகுதியுடையவர்கள் அனைவரும் வருடம் ஒரு முறையாவது குருதிக்கொடை செய்து பிறருக்கு உதவும் மனப்பான்மையையும் பெற வேண்டும் பதினெட்டுத் தொடக்கம் ஐம்பத்தைந்து வயது வரை நோய்கள் அற்ற ஆண், பெண் இருபாலாரும் குருதிக்கொடை அளிக்க முடியும்.

இவர்களின் உடல் நிறை 45கிலோ கிராமிலும் அதிகமாக இருத்தல் வேண்டும். அவர்களின் குருதியில் ஈமோகுளோபின் அளவு 12கிராம் வீதத்திற்கும் அதிகமானதாக இருந்தால் அவர்கள் குருதிக்கொடை அளிக்கத் தகுதியானவர்கள் இவ்வாறான தகுதியுடையவர்கள் அனைவரும் தாமாக முன்வந்து குருதிக்கொடை அளித்தால் பிறரின் உயிர்காக்க உதவமுடியும் ஓராண்டினை நிறைவு செய்யும் நோயாளர் நலன்புரி சங்கத்தின் குருதிக்கொடை இயக்கத்திற்கு எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

★

---

## கலை வர்த்தக கல்லூரி

**C. C. A.**

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**G.C.E. A/L 97**

**புதிய பிரிவு**

கலை வர்த்தக வகுப்புக்கள்

சனி, ஞாயிறு

எமது வழமையான ஆசிரியர் குழு

**ஆரம்பம்: 13 - 05 - 95**
காலை 8-00 மணி

[சி-1191] – நிர்வாகி

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



எங்கள் புதல்வன்
**அருணன்**

மலர்வு: 17 - 07 - 1994

உதிர்வு: 11—04—1995

மாயையில் புரளும் உலகினில் யாவும் விதிப்பயனே!
எத்தனையோ செல்வங்கள் இவ்வுலகில் நிறைந்தே-
இருந்திடினும்
எமக்கு இன்பம் தர வந்துதித்தாய் மகனே
மழலையின் குணங்கள் மலரும் முன்பே
படைத்தவன் மடியைப் பார்த்திட நினைத்தாயோ.

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் உதித்த செல்வன் அருணன் நோயுற்ற போது உதவி வழங்கியவர்களுக்கும் மரணச்செய்தி கேட்டு ஆறாத்துயரில் மூழ்கிய எங்களுக்கு ஆறுதல் கூறிய உறவினர்கள், அன்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்

பிரிவினால் துயருறும்;
குடும்பத்தினர்,

நா. சண்முகரத்தினம்,
தலையாழி
கொக்குவில்.

(36593)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
892/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## இடித்துரைக்க முன்வருவாரா?

தமிழ் மக்கள் விரும்பும் சமஷ்டி அமைப்பை வழங்குவதற்கான தருணம் இதுவே என்று விமானப் படையின் முன்னாள் தளபதிகளில் ஒருவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களில் ஒருவருமான எயர் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக்கா தெரிவித்திருக்கிறார்.

இவர் ஜனாதிபதி சந்திரிகாவின் கீழ் இயங்கும் பாதுகாப்பு ஆலோசனைச் சபையின் உறுப்பினரும், கடந்த மாதம் 28ஆம் திகதி விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளான 'அவ்ரோ' விமானத்தை ஓட்டிவந்த கட்டளை இடும் அதிகாரி ஸ்ரீயந்தா குணதிலக்காவின் தந்தையுமாவார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் போர் நடந்து கொண்டிருந்த வேளையில், இவர் போர் நடத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்று பி.பி.சிக்கும் ஏனைய பத்திரிகைகளுக்கும் அழுத்தம் திருத்தமாகக் கூறிவந்தார்.

ஆனால் சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில்—

சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றாலும், அரசாங்க படைகள் போருக்குத் தயாரான நிலையில் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்.

மோதல் தவிர்ப்பு முறிந்து மீண்டும் போர் ஆரம்பமாகி விட்ட நிலையில், விடுதலைப் புலிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்று கூறியவர்.

இப்போது சமஷ்டி அமைப்பை வழங்குவதற்கு இதுவே உகந்த தருணம் என்று கூறுகிறார்.

முன்னாள் விமானப்படைத் தளபதி ஒரு முழுநேர அரசியல் வாதியல்லர். எனவே அவரது கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து கணக்கில் எடுக்கலாமா?

ஹரிகுணதிலக்கா முழுநேர அரசியல்வாதியாக மாறாவிட்டாலும், அமைச்சராக அல்லது அரச உயர் அதிகாரியாக இல்லாவிட்டாலும் அரசாங்கத்துடன், அரச உயர் வட்டாரங்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டவர் என்ற வகையில் அவரது கருத்தை நோக்கலாம்.

தாம் கௌரவத்துடனும், சுதந்திரத்துடனும் வாழக் கூடியதாக தங்களுக்கெனத் தனியான நாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை. ஆனால் அதற்குப் பதிலான மாற்றுத் திட்டம் ஒன்றைப் பரிசீலிக்கத் தயார் என்பதே அவர்களின் நிலைப்பாடு.

தங்கள் தாயகத்தில் தன்னாட்சி உரிமையும், அதிகாரமும் கொண்ட ஆட்சி அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதிலிருந்து தமிழர்கள் எந்த வகையிலும் கீழே இறங்கிப் போக முடியாது

ஆனால் சந்திரிகா அரசு ஒற்றையாட்சி அமைப்புக்குள்ளேயே சில சரிக்கட்டுதல்களைச் செய்து, தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்று எண்ணி அதன் அடிப்படையிலேயே செயற்படுகிறது.

ஆகக் குறைந்தது சமஷ்டி, அதாவது கூட்டாட்சி முறை கொண்டு வராமல் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதே உண்மையான நிலை

அரசியல் தீர்வு என்று வெறுமனே ஒப்புக்குக் கத்தும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு அதனுடன் நெருக்கமானவுள்ள ஹரி குணதிலக்கா போன்றவர்கள் இதனை இடித்துரைக்காதது ஏன்?

அரசியல் தீர்வு என்றால் அரசியல் தீர்வையே காண்பது என்ற நிலையில்லாமல், அதனுடன் போரையும்— இராணுவத் தீர்வையும்— சேர்க்கும் அணுகு முறை ஒரு போதும் வெற்றிதராது; நல்ல பயனை விளைவிக்காது! அமைதியைத் தோற்றுவிக்காது என்பதனை அரசுக்கு ஹரி குணதிலக்கா போன்றவர்கள் எடுத்துச் சொல்வார்களா?

# யாழ். பல்கலை. மருத்துவ மாணவர் பிரச்சினை

# நிலைமையை விளக்குகின்றார் துணைவேந்தர்

## 37 மாணவரை அனுமதிப்பதால் எமது சமூகத்துக்கே நன்மை என வலியுறுத்து

1991இல் உயர்கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட இரண்டாவது எம்.பி.பி.எஸ். பரீட்சையில் சித்தியடைந்த— முன்னாள் வட இலங்கை மருத்துவக்கல்லூரியின் மாணவர்கள் 37பேர் தங்களது மருத்துவப்படிப்பை பூர்த்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு கோரி பல வருடங்களாகப் போராடி வருகின்றனர்.

அவர்கள் தங்களது பிரச்சினைகளை முன்னைய அரசுக்கும் தற்போதைய அரசுக்கும் வேறுபல நிறுவனங்களுக்கும் எடுத்துரைத்தார்கள்.

1994ஏப்ரலில் நான் துணைவேந்தராகக் கடமையேற்ற பின்னர், இந்த விடயம் தொடர்பாக வட இலங்கை மருத்துவக்கல்லூரி மாணவர்கள், எமது பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒன்றியம் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகளினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை இந்தக் குறிப்பு விவரிக்கும்

### மாணவர் விண்ணப்பம்

1 1991இல் இரண்டாவது எம். பி. பி. எஸ். பரீட்சையில் சித்தியடைந்த முன்னாள் வட இலங்கை மருத்துவக்கல்லூரி மாணவர்கள், தங்களது மருத்துவப்படிப்பை பூர்த்தி செய்வதற்காக யாழ். பல்கலைக்கழகத்தில் தங்களுக்கு அனுமதி வழங்கும்படி 1994மே மாதம் யாழ். பல்கலைக்கழகத்திடம் விண்ணப்பித்தனர்.

இந்த விண்ணப்பத்துக்கு பல முன்னணிப் பாடசாலைகளின் அதிபர்கள், கல்விப் பணிப்பாளர்கள், அரச அதிகாரிகள், சிரேஷ்ட அரச மற்றும் தனியார் மருத்துவர்கள், யாழ்ப்பாணத்தின் பல முன்னணிப் பிரமுகர்கள் ஆகியோரினதும் தமிழர்களின் கல்வி விருத்திக்கான கவுன்சிலினதும் ஆதரவு வழங்கப்பட்டிருந்தது

### மூதவையின் முடிவு

2. வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கோரிக்கையை மருத்துவ பீடச்சபையின் பரிசிலனைக்கு அனுப்பிய பல்கலைக்கழக மூதவை, அதன் பின்னர்—

1995இல் தமது இரண்டாவது எம். பி பி. எஸ் படிப்பைப் பூர்த்தி செய்யவிருக்கும்— மருத்துவபீடத்தின் ஆகக் குறைந்த எண்ணிக்கையான 45 மாணவர்களைக் கொண்ட— அணியுடன் சேர்த்து இவர்களுக்கு இடமளிப்பது என 1994 ஒக்டோபரில் முடிவு செய்தது. மூதவையின் இந்த முடிவு மனிதாபிமான அடிப்படையிலும் பின்வரும் அவதானிப்புகளின் அடிப்படையிலும் அமைந்திருந்தது.

[i] அனுமதி கோருவோரின் ஆகக் கூடிய எண்ணிக்கை 49 [தற்போது 37]ஆக இருப்பதோடு, அவர்கள் அனைவரும் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறுவதற்குத் தேவையான ஆகக் குறைந்த தகுதியையேனும் பெற்றுள்ளனர். அத்தோடு உயர் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட இரண்டாவது எம்.பி.பி.எஸ். பரீட்சையிலும் அவர்கள் சித்தி அடைந்துள்ளனர்.

[ii] பீடத்தின் உள்ளக மாணவர்களைப் பாதிக்காத வகையில் இந்த மாணவர்களுக்கு இடமளிப்பதற்கு பீடத்தில் போதிய இடம் இருந்தது. பீடத்தில் அனுமதிக்கப்படக்கூடிய மாணவர் எண்ணிக்கை நூறுக்கும் அதிகம் என்பதுடன், உண்மையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எமது கொள்ளளவுக்கு மிகவும் குறைவாகவும் இருந்தது.

[iii] இந்தப் பிரதேசத்தில் டாக்டர்களுக்கு கடும் பற்றாக்குறை நிலவுகின்றது. இந்த மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதனால் இந்தப் பிரச்சினையின் தீவிரம் ஓரளவு குறையும்.

[iv] இந்த மாணவர்கள் ஒரு பாதிக்கப்பட்ட குழுவினராவர்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் (ஜி.எம்.ஓ.ஏ.) மற்றும் பல்கலைக்கழக மருத்துவபீடங்கள் ஆகியவற்றின் அழுத்தம் காரணமாக தனியார் மருத்துவக் கல்லூரிகளை ஒழித்த முன்னைய அரசாங்கம், இந்த மாணவர்களின் பிரச்சினையை அங்கீகரித்த ஆதேசமயம்— அது குறித்து பல்வேறு யோசனைகளை முன்வைத்த போதிலும்— இந்த மாணவர்கள் தமது கல்வியைத் தொடர திட்டமான மாற்று ஏற்பாடுகள் எதனையும் செய்யவில்லை.

வட கொழும்பு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தமது படிப்பைப் பூர்த்தி செய்ய முன்னைய அரசாங்கத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் விடயத்தில் எந்த ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

(v) ஒரு சிறிய எண்ணிக்கையான மாணவர்களுக்கு ஒரு தடவை மட்டும் அனுமதி வழங்கும் விடயம் இது. அத்துடன், தற்போது செயல் இழந்துபோன வட இலங்கை மருத்துவக் கல்லூரியையோ அல்லது வேறு தனியார் நிறுவனம் எதனையுமோ யாழ் பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் கேள்விக்கும் இதில் இடமில்லை

### விரிவுரையாளர்களை புண்படுத்திய செயல்

3. யாழ் பல்கலைக்கழகத்தில் இந்த மாணவர்களுக்கு இடமளிப்பது என்று மூதவை முடிவு செய்தபோது, விரிவுரை [போதனை] மற்றும் கடமைகளில் ஈடுபடும் பணியாளர்களை பீடத்துக்கு வெளியே விட்டு பூட்டுவதன் மூலம் தனது எதிர்ப்பை மருத்துவ மாணவர் ஒன்றியம் மேடையேற்றியது

அது அநாகரீகமான செயல் என்பதோடு போதனாசிரியர்களின் உணர்வுகளையும் புண்படுத்தியதால், மாணவர்களுக்கு ஒரு மாதத்துக்கு விரிவுரைகளை நடத்துவதற்கு அவர்கள் மறுத்தனர்.

போதனாசிரியர்களை இரண்டு வாரங்களுக்கு வெளியே விட்டுப் பூட்டிய பின்னர், துணைவேந்தரிடமும் மருத்துவபீட போதனாசிரியர்களிடமும் மன்னிப்புக் கோரும் கடிதங்களை வழங்கிய மருத்துவ மாணவர் ஒன்றியம், வகுப்புகளைத் தொடர்ந்து எடுக்கும்படி போதனாசிரியர்களிடம் கோரியது.

### தாராள மனது

தங்களது மாணவர்களினாலேயே தாங்கள் அவமானப்பட்டிருந்த போதிலும், போதனாசிரியர்கள் தாராள மனதுடன் வகுப்புக்களை ஆரம்பிக்க இணங்கினர்.

இரண்டாவது எம். பி. பி. எஸ். சித்தியடைந்த — முன்னாள் வட இலங்கை மருத்துவக் கல்லூரியின் — மாணவர்களை அனுமதிப்பது என்ற தனது முடிவை பல்கலைக்கழக மூதவை மாற்றவில்லை. எனினும் நடவடிக்கை எடுப்பதை அது இடைநிறுத்தி இருந்தது. அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உள்ளூர் கிளையுடனும் அதன் மூலம் மருத்துவ மாணவர்களுடனும் துணைவேந்தர் பேச்சுக்களை ஆரம்பித்தார்.

### புதிய அரசுடன் தொடர்பு கொண்டனர்

4. இதே சமயம் முன்னாள் வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக புதிய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டார்கள்.

முன்னாள் வட இலங்கை மருத்துவக்கல்லூரி மாணவர்கள் 37 பேரையும் யாழ் பல்கலைக்கழகத்தின்மருத்துவ பீடத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி பல்க்லைக்கழக மானிய ஆணைக்குழுவுக்குஜனாதிபதிசந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க பணித்தார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர், துணைவேந்தருக்கு— அரச அதிபர் ஊடாக— ''பக்ஸ்,, மூலம் அனுப்பிய—1995மார்ச் முதலாம் திகதியிடப்பட்ட— தமது கடிதத்தில், 37 மாணவர்களின் பட்டியலை இணைத்ததோடு, அந்த 37 மாணவர்களையும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் சேர்க்க பொருத்தமான நடவடிக்கைகளை விரைவில் எடுக்கும்படியும் கேட்டுக் கொண்டார்.

### பீடச்சபை மீளவலியுறுத்தியது

5. துணைவேந்தர் இந்[illegible] கடிதத்தை மருத்துவ பீடச் சபையின் பரிசிலனைக்கு அனுப்பினார்.

மருத்துவபீடத்தின் ஆகக் குறைந்த எண்ணிக்கை கொண்ட— 45 மாணவர் அணியுடன்— இந்த மாணவர்களுக்கு இடமளிக்கலாம் என்ற தனது முன்னைய முடிவை மீள வலியுறுத்திய மருத்துவ பீடச்சபை அதனை பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய செயற்படுத்தலாம் எனவும் தெரிவித்தது.

(i) ஒரு தடவை மட்டும் வழங்கப்படும் அனுமதி: மீண்டும் செய்யப்படக் கூடாது.

(ii) இந்த 37 பேர் குழுவுக்கு மட்டுமே அனுமதி வேறு ஆட்களுக்கு இனி மேல் அனுமதி வழங்கக் கூடாது.

(iii) அனுமதிக்கப்பட்டால், அவர்கள் எமது ஆகக் குறைந்த எண்ணிக்கை கொண்ட மாணவர் அணியுடன் அதாவது 92/93 அணியுடன் இணைவார்கள். அவர்களுக்கான 3 ஆவது எம் பி. பி. எஸ் கல்வி 1996 இல் ஆரம்பமாகும்; மொத்த மாணவர்களின் எண்ணிக்கை வழமையாக உள்ளெடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கைக்குக் கூடுதலாக இருக்க கூடாது

(iv) எமது மாணவர்களுக்கு வழங்கப்படும் அ[illegible]றிதழ்கள் அவர்களுக்கு வழங்கப்படக் கூடாது என்பதுடன், கல்விப் போதனை பூர்த்தியடையும் போது அவர்களின் தனி அடையாளத்தை வெளிப்படுத்தும் சான்றிதழ் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ''யாழ். பல்கலைக்கழகம் (வட இலங்கை மருத்துவக் கல்லூரி)'' என்ற தலைப்பை அது கொண்டிருக்க வேண்டும்.

(v) உள்ளகப் பயிற்சி நியமனங்களுக்கான தகுதிப் பட்டியலில் அவர்களின் பெயர்கள் அடிமட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

### மாணவரின் கருத்து கோரப்பட்டது

கிளினிக்குகள் மற்றும் விரிவுரைகளில் எமது மாணவர்கள் பாதிக்காத விதத்தில் வடஇலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களை அனுமதிப்பதற்கு சிறந்த வழி எது என்பது குறித்து மாணவர்களின் கருத்துக்களை பீடம் கோரியிருந்தது. தங்களது கருத்துக்களைத் தெரிவிப்பதாக உறுதியளித்திருந்த மாணவர்கள், இதுவரை தங்கள் கருத்தைக் கூறவில்லை.

மருத்துவபீடச் சபையின் கருத்துக்களை கவனத்தில் எடுத்த மூதவையும், பேரவையும், மாணவர்களைப் பாதிக்காத விதத்தில் இந்த மாணவர்களை பீடத்தில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்யுமாறு மருத்துவ பீடச் சபையைக் கேட்டுள்ளதுடன் அந்த ஏற்பாடுகளின் விவரத்தை பீடம் தமக்கு தெரியப்படுத்துவதை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றன.

### கடிதம் ஏதும் அனுப்பப்படவில்லை

வடஇலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களை பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்வதற்கான கடிதம் எதுவும் அவர்களுக்கு இதுவரை அனுப்பப்படவில்லை.

### மீண்டும் அதே செயல்!

6. 1995மே5ஆம்திகதி—முன்னெச்சரிக்கையோ அல்லது நிர்வாகத்துடன் நேர காலத்துடனான கலந்துரை[illegible] தாங்கள் முதலில் செய்து [illegible] புக் கோரிய அதே நடவடிக்கையை — விரிவுரையாளர்கள் மற்றும் போதனாசிரியர்களை மருத்துவ பீடத்துக்கு வெளியே விட்டு பீடத்தைப் பூட்டும் செயலை — மருத்துவ மாணவர் ஒன்றியம் நாடியது.

மருத்துவபீடச் சபை அன்றைய தினமே பல்கலைக்கழக சபை மண்டபத்தில் அவசரமாகக் கூடியது. மாணவர்களினால் பீடம் பூட்டப்பட்டிருக்கும் காலத்தில் தவறவிடப்படும் விரிவுரைகள், கிளினிக்குகள், பரீட்சைகள் ஆகியவற்றை மீண்டும் நடத்துவதில்லை என்று முடிவு செய்த பீடச்சபை மருத்துவ மாணவர் ஒன்றிய அங்கத்தவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி துணைவேந்தரையும் கோரியது.

பீடத்தைத் தொடர்ந்து பூட்டி வைத்திருந்தால், ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்து மருத்துவ மாணவர் ஒன்றியத் தலைவருக்கு துணைவேந்தர் கடிதம் ஒன்றை அனுப்பினார்.

### பொய்த் தகவல்கள்

7. மருத்துவ மாணவர் ஒன்றியம் மே 8 ஆம் திகதி அனைத்து மாணவர் ஒன்றியங்களினதும் கூட்டத்தைக் கூட்டியது அந்தக் கூட்டத்தில் தவறாக வழிநடத்தும்—அப்பட்டமான பொய்த் தகவல்கள்—பல வெளியிடப்பட்டதாக நான் அறிந்தேன்

இந்தக் கூட்டத்தின் பின்னர், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் துணைவேந்தருக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார். மருத்துவ மாணவர் ஒன்றியத்துக்கு ஆதரவு தெரிவித்து, எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில், மருத்துவ மாணவர்ஒன்றியத்துக்கு ஆதரவாக மற்றைய பீட மாணவர்களும் ஒரு நாள் வகுப்புக்களைப் பகிஷ்கரிப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது.

1995 மே 9 ஆம் திகதி பதாகைகள் சகிதம் பிரதான வளாகத்துக்குள் இன்னொரு அடையாள எதிர்ப்பு நடவடிக்கையை மேடையேற்றிய மருத்துவ மாணவர் ஒன்றியம், ஏனைய மாணவர் ஒன்றியங்களுடன் இணைந்து கூட்டம் ஒன்றையும் நடத்தியது.

செயலகம் வரை ஊர்வலம் சென்று, ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான மகஜர் ஒன்றை அரச அதிபரிடம் ஒப்படைப்பது என மாணவர்கள் முடிவு செய்தனர்.

### இன்னும் பூட்டப்பட்டுள்ளது

8 மருத்துவபீடக் கதவுகள் இன்னும் பூட்டப்பட்டுள்ளன. பணியாளர்கள் பீடத்துக்குள் செல்ல முடியாதுள்ளனர்.

எமக்கு போதிய வசதி இருப்பதால் எமது மருத்துவபீடத்துக்கு மேலும் மாணவர்களை அனுமதிக்கும்படி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவையும் உயர்கல்வி அமைச்சையும் நாம் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றோம். எனவே இந்த 37 மாணவர்களையும் மருத்துவ பீடத்தில் அனுமதிப்பது எந்த வகையிலும் மருத்துவ பீட மாணவர்களைப் பாதிக்காது என்பதே எனது திடமான கருத்தாகும்.

மேலதிக எண்ணிக்கையான மாணவர்களுக்கு போதனை வழங்க எம்மிடம் போதிய வைத்திய நிபுணர்கள் இல்லை என்ற அடிப்படையில் இந்த 37 மாணவர்களுக்கும் அனுமதி வழங்க மறுப்பது,

எமது அனுமதிக்கொள்ளளவு நாம் முன்னர் குறிப்பிட்டதற்கு குறைவானது என நாமே ஒப்புக் கொள்வதாகி விடும். இது பீடத்துக்கு எதிர்காலத்தில் மாணவர் அனுமதிக்கப்படுவதையும் பாதித்துவிடும்.

### சுயநலப்பார்வை

9 எனது கருத்துப்படி — மருத்துவ மாணவர் ஒன்றியமும் அதை ஆதரிப்போரும் இந்தப் பிரச்சினையை மனிதாபிமான, சமூகக் கோணத்திலிருந்து நோக்கவில்லை; சுயநல, சுயகௌரவ நோக்கத்துடன் தங்களது தவறான சுயபார்வையுடன் இதை அணுகுகின்றார்கள்

மேலதிக மருத்துவ ஆளணியினரை பயிற்றுவிப்பதன் மூலம் எமது சமூகத்துக்கும் கிடைக்கவிருக்கும் நன்மைகளை அவர்கள் கவனத்தில் எடுக்கவில்லை.

(6 ஆம் பக்கம் பார்க்க)

> மூடப்பட்ட வட இலங்கை மருத்துவக் கல்லூரியின் மாணவர்கள் 37 பேரை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இணைந்து கல்வியைத் தொடர அனுமதிப்பது என எடுக்கப்பட்ட முடிவு குறித்தும்—
>
> அதனை அடுத்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் எழுந்துள்ள நெருக்கடி குறித்தும்—
>
> உண்மை நிலையை விளக்கும் அறிக்கை ஒன்றை யாழ் பல்கலைக்கழகத்துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினம் தயாரித்துள்ளார்.
>
> அந்த அறிக்கையை இங்கே முழுமையாகப் பிரசுரிக்கிறோம்.

# வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர் பற்றிய பின்னணி

1. 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தின் 25ஆவது பிரிவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியதன் மூலம் தனியார் மருத்துவ நிறுவனங்கள் எம். பி. பி. எஸ். பட்டத்தை வழங்குவதை ஸ்ரீலங்கா அரசு அங்கீகரித்தது.

2. ராகம, வட கொழும்பு மருத்துவக் கல்லூரி 1985 இல் ஆரம்பிக்கப்பட்டது. அதே போன்று வட இலங்கை மருத்துவக்கல்லூரி 1981 இல் ஆரம்பிக்கப்பட்டது.

3. 1985இல் முதலாவது அணியில் 79மாணவரும் 1986 இல் இரண்டாவது அணியில் 56மாணவரும் வட இலங்கை மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

4. பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த குழு ஒன்று வட இலங்கை மருத்துவக் கல்லூரிக்கு விஜயம் செய்தது. இரண்டாவது எம். பி. பி. எஸ் வரையான வசதிகள் அங்கு திருப்திகரமாக இருப்பதாக அக்குழு அறிக்கை சமர்ப்பித்தது.

இதே போன்று வட கொழும்பு மருத்துவக் கல்லூரியும் கட்டம் கட்டமாகவே அங்கீகரிக்கப்பட்டது.

5. இரண்டாவது எம். பி. எஸ். பரீட்சை 1987 இல் நடத்தப்பட வேண்டியிருந்தது. ஆனால் அதனை நடத்துவதற்கு எந்த ஏற்பாடும் அரசினால் செய்யப்படவில்லை

6 வட இலங்கை மருத்துவக் கல்லூரியை நிர்வகிக்கும் அமைப்பான வட இலங்கை மருத்துவ அதிகாரிகளின் சபை 1988 நவம்பர் 24 ஆம் திகதி, 1988 இன் 45 ஆம் இலக்கச் சட்டம் மூலம் நாடாளுமன்றத்தினால் கூட்டிணைக்கப்பட்டது. இதன் மூலம் வட இலங்கை மருத்துவக்கல்லூரி அசாங்கத்தினால் பகிரங்கமாக அங்கீகரிக்கப்பட்டது.

7. பல்கலைக்கழகங்கள் கொடுத்த அழுத்தம் காரணமாக 1989 மே மாதம் 8 ஆம் திகதியன்று 1989இன் 3ஆவது திருத்தச் சட்டம் மூலம் தனியார் மருத்துவக் கல்லூரிகளை அரசு தேசியமயமாக்கியது.

8. வட கொழும்பு மருத்துவக் கல்லூரி தேசிய மயமாக்கப்பட்டு, களனிப் பல்கலைக் கழகத்துக்குள் உள்ளெடுக்கப்பட்டது. ஆனால் வட இலங்கை மருத்துவக் கல்லூரி அவ்வேளை தேசியமயமாக்கப்படவில்லை.

9. பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்ட பின்னர், இந்த விடயம்குறித்து ஆராய டாக்டர் ஸ்ரீபன் தலைமையில் குழு ஒன்றை உயர்கல்வி அமைச்சு நியமித்தது

10. இரண்டாவது எம். பி. பி. எஸ். பரீட்சை உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்றும்—

அதன் பின்னர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மருத்துவ பீடத்தில் இந்த மாணவர்கள் தமது மருத்துவக் கல்வியைத் தொடர வசதி செய்ய வேண்டும் என்றும்—

1989 நவம்பர் 7 ஆம் திகதி ஸ்ரீபன் குழு சிபார்சு செய்தது.

11. வட கொழும்பு மருத்துவக் கல்லூரியில் 1990 ஜூலை 7ஆம் திகதி நடைபெறவிருந்த இரண்டாவது எம். பி. பி. எஸ். பரீட்சைக்குத் தோற்றும்படி வட இலங்கை மருத்துவக்கல்லூரி மாணவர்களை உயர்கல்வி அமைச்சு கோரியது.

12. சண்டை வெடித்ததால் இப்பரீட்சை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

13. 1991 ஏப்ரல் 24 ஆம் திகதி வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் சபை இயக்குநர்கள் ஜனாதிபதியின் செயலாளருடன் நடத்திய சந்திப்பில் இரண்டாவதுஎம்.பி.பி.எஸ். பரீட்சையை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

14. அதன்படி, வட கொழும்பு மருத்துவக் கல்லூரி மற்றும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் ஆகியவற்றின் இணைந்த பரீட்சார் குழு வடகொழும்பு மருத்துவக்கல்லூரியில் இரண்டாவது எம். பி. பி. எஸ். பரீட்சையை நடத்தியது. அதாவது மாணவர்கள் பரீட்சைக்கு பதிவு செய்த போதிலும் 49 பேர் பரீசையில் சித்தியடைந்தனர்.

15. 1991மே 22ஆம் திகதி, 1991 ஒக்டோபர் 23ஆம் திகதி, 1993 மார்ச் 24ஆம் திகதி ஆகிய திகதிகளில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஸ்டீபன் குழுவின் சிபார்சுகளை நடைமுறைப் படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்ட போதிலும், அதனை நடைமுறைப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

16 மாணவர் அமைப்பு தொடர்ந்து செய்த முறைப்பாடுகளை அடுத்து, பிரதமர் தலைமையிலான — நிதி விவகாரங்களுக்கான — அமைச்சரவை உபகுழு டாக்டர் ஸ்டீபன் தலைமையில் மற்றொரு குழுவை நியமித்தது. கிழக்குப்பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும், வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தமது மருத்துவக் கல்வியைப் பூர்த்தி செய்வது குறித்தும் ஆராய்வதற்காகவே இக் குழு நியமிக்கப்பட்டது

17. கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை உடனடியாக ஆரம்பிப்பது சாத்தியமில்லை என்றும்—

வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இடமளிக்க வேண்டும் என்றும்—

ஓகஸ்ட் 9 ஆம் திகதி ஸ்டீபன் குழு சிபார்சு செய்தது.

18. ஸ்டீபன் குழுவின் சிபார்சு குறித்து முடிவு செய்வதற்காக அமைச்சரவை உபகுழு 1993 ஒக்டோபர் 5 ஆம் திகதி கூடிய போது, யாழ் பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒன்றியத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மனு ஒன்று அங்கு முன்வைக்கப்பட்டது.

ஒரு திட்டவட்டமான முடிவு அங்கு எடுக்கப்படாத போதிலும்; யாழ் பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் ஆதரவைத் தேடிக் கொண்டு இந்த மாணவர்களை யாழ். பல்கலைக்கழகத்தில் சேர்ப்பது என அமைச்சரவை உபகுழு தீர்மானித்தது.

19 டாக்டர் ஸ்டீபன் விடுத்த கோரிக்கை ஒன்றுக்குப் பதிலளித்த அனைத்து மருத்துவப் பீடங்களிலும்— யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனையவை அனைத்தும்— தங்கள் கோட்டாவுக்கும் அதிக எண்ணிக்கை மாணவர்களை அனுமதித்திருப்பதாகவும் அதனால் இந்த மாணவர்களுக்கு இடமளிக்க முடியாதிருப்பதாகவும் தெரிவித்திருந்தன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த நிலைமையையும் எதிர்கொள்ள அரசு ஆயத்தமாகவே இருக்கிறது

## மகாசங்கத்தினரிடம் சந்திரிகா கூறினார்

கொழும்பு, மே. 11 நாட்டில் ஏற்படக்கூடிய எந்தவித நிலைமைகளையும் எதிர் கொள்வதற்கு அரசாங்கம் ஆயத்தமாக இருக்கிறது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று நடந்த பௌத்த ஆலோசனை சபைக் கூட்டத்தில் மகாசங்கத்தினர் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கையிலேயே மேற்கண்டவாறு ஜனாதிபதி கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது!

ஆயுதப்படைகளைப் பலப்படுத்துவதற்கும், சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும், சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இப்பிரச்சினைக்கு சமாதான முறையில் தீர்வுகாண அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டன.

ஆனால் விடுதலைப் புலிகள் இதற்கு இணங்கவில்லை.

அரசாங்கம் சமாதானத்துக்காக பெரு முயற்சி செய்கின்ற போதிலும் ஆயுதப்படைகளின் பலத்தை குறைப்பதோ, அல்லது படைவீரர்களின் உற்சாகத்தை மழுங்கடிக்கச் செய்வதோ அதன் நோக்கமல்ல.

படையினரின் பலத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தற்போதைய அரசு பதவி ஏற்றபோது இராணுவத்துக்குத் தேவையான உபகரணங்கள் போதியளவு இருக்கவில்லை இவ்வாறு அவர் கூறினார். (ஒ-3)

## மருத்துவ மாணவர்கள் 6 பேர் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், மே 11 யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தைச் சேர்ந்த 6 மாணவர்கள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுக் காலை 9 மணிக்கு உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தனர்.

துணைவேந்தரின் அலுவலகத்துக்கு முன்பாக, விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் இவர்கள் தமது உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

கலை, விஞ்ஞான பீடங்களைச் சேர்ந்த சுமார் 50 மாணவ, மாணவிகளும் மருத்துவ பீட மாணவர்களுக்கு ஆதரவாக அடையாள உண்ணாவிரதம் இருந்தனர்.

முடிவில் ஐந்து நாட்களுக்கு உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படும் என்றும், சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில் மேலும் விஸ்தரிக்கப்படும் என்றும்— மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மாணவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் வருமாறு:-

✶ தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 37 பேரை மருத்துவபீடத்தில் கல்விகற்க அனுமதிப்பது தொடர்பான சகல நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டும். இதற்கு ஆதரவு கொடுக்கக் கூடாது.

★ இந்த மாணவர்கள் அனுமதியை பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றுபட்டு எதிர்க்கிறார்கள் என்ற விடயத்தை அரசாங்கத்துக்கு உடன் அறிவிக்கவேண்டும்.

✶ எமது போராட்டம் தொடர்பாக எந்த வித ஒழுங்கு நடவடிக்கையையும் எடுக்கக்கூடாது. (அ-3)

## சூட்டுக்கு பலியானவரின் இரு கண்களும் தானம்

யாழ்ப்பாணம், மே. 11 செம்மணியில் நேற்று முன்தினம் படையினரின் சூட்டுக்கு பலியான 30 வயது இளைஞனின் இரு கண்களும் தானம் செய்யப்பட்டுள்ளன.

சூட்டுக்கு பலியான இராசா சிவலோகநாதனின் இருகண்களையும் தானம் செய்ய அவரது சகோதரன் முன்வந்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து டாக்டர் எஸ். யோகராஜா அவரின் இரு கண்களையும் உடனடியாக சத்திர சிகிச்சை மூலம் எடுத்தார்.

இவ்விரு கண்களில் ஒரு கண் பனிக்கன்குளத்தைச் சேர்ந்த 27 வயதான 2 பிள்ளைகளின் தந்தைக்கு, கண் சத்திர சிகிச்சை நிபுணர் ஐ. கண்ணுத்துரையால் நேற்று பொருத்தப்பட்டது. (அ-13)

### அதிரடிப்படையின் தாக்குதலில்

## காயமடையும் பொதுமக்கள் சிகிச்சை பெறவும் தடை

மட்டக்களப்பு மகிழடித்தீவு பொலீஸ் அதிரடிப்படை முகாம் படையினர் தம்மால் தாக்கப்படும்போது காயங்களுக்கு உட்படும் அப்பகுதி மக்கள் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறக் கூடாது என உத்தரவிட்டுள்ளனர்.

காயப்பட்ட எவரும் மருத்துவமனைக்குச் செல்ல ஆற்றைக் கடக்கக்கூடாது எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர்களுக்கு சிகிச்சை அளிக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும் மறுக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மரணத்தோடு போராடும் நிலையில் கூட செஞ்சிலுவைச் சங்கத்தினர் சிகிச்சை அளிக்க மறுத்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-4)


## அறிவித்தல்

ஹஜ் விடுமுறையை முன்னிட்டு படக் காட்சிகள் இரத்து செய்யப்பட்டிருப்பதால்

**நங்கூரம்**

வாசகர்களுக்கான

விசேட படக்காட்சி

இன்று நடைபெறமாட்டாது

★ மீள திரையிடும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்

(சி/1195)


## மரண அறிவித்தல்

### நல்லதம்பி நடராஜா
### [வயிரவநாதன்]

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற நல்லதம்பி, பொன்னம்மா தம்பதிகளின் மகன் நல்லதம்பி நடராஜா கனடாவில் காலமாகிவிட்டார்.

இவர் தில்லையம்பலம் தம்பதிகளின் மருமகனும், சற்குணத்தின் அன்புக் கணவனும், காலஞ்சென்ற நரசிங்கவர்மன், மற்றும் நற்றமிழ்ச்செல்வி (கனடா), கலைச்செல்வி [கனடா], பங்கயற்செல்வி [கனடா] ஆகியோரின் பாசமிகு தந்தையும், கருணாகரன், சத்தியலிங்கம், சுகுமார் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சண்முகலிங்கம், மற்றும் இரத்தினபூபதி, விஜயரெட்ணம் [ஓய்வுபெற்ற நூலக பரிபாலகர் யாழ் போ. வைத்தியசாலை), ஈஸ்வரி, காலஞ்சென்ற அமிர்தலிங்கம் ஆகியோரின் சகோதரனுமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. விஜயரெட்ணம்
(கணேஸ்)
(சகோதரன்)

36, கோயில் வீதி ஒழுங்கை,
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(36600)

## தபால் பொதிகள் இறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், மே 11 பருத்தித்துறையில் நேற்று பொருள்களை இறக்க ஆரம்பித்துள்ள 'லங்கா முடித' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள 473 தபால் பொதிகளும் நேற்று இறக்கப்பட்டன.

தபால் பொதிகள் யாழ். தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டு நாளைமுதல் மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

யாழ். பிரதம தபாலதிபர் திரு. செ. கோடீஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார். (ஒ-3-4-173)

## மிதிவெடியில் சிக்கிய பெண்கள்!

மட்டக்களப்பு ஏறாவூரில் கைவிடப்பட்டிருந்த தமது வீட்டுக்குச் சென்ற தமிழ்ப் பெண் இராணுவத்தினர் புதைத்து வைத்த மிதிவெடியில் சிக்கி தனது காலை இழந்தார்.

ஏறாவூரில் மணியாபுரம் கிராமத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இதேவேளை ஏறாவூரில் ஐயன்கேணி கிராமத்தில் இராணுவத்தினர் கவசமாகக் கூட்டிச் சென்ற தமிழ் பெண் ஒருவரே மிதிவெடியில் சிக்கி தனது காலை இழந்தார். (ஒ-4)

---

**29 லட்சம்..**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடந்த ஏலவிற்பனையில் ஜே. ஆரின் ஆடம்பரக் கார் 29 லட்சத்துக்கு விற்பனையானது

14 ஆடம்பரக் கார்களும், 3 ஜீப்புகளும் நேற்று ஏலத்தில் விடப்பட்டன. (ஒ 3)

---

**"அவ்ரோ"...**

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த கொழும்பில் இருந்து உயர் அதிகாரிகள் வரலாம் என்று எதிர்பார்த்தே புலிகள் காத்திருந்து அடுத்த நாள் காலை இரண்டாவது அவ்ரோ விமானத்தை வீழ்த்தி இருக்கலாம் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாரிகள் கூறுவது போல முதலாவது விமானம் வீழ்ந்த சம்பவத்துக்கு இயந்திரக் கோளாறு காரணமாக இருக்க முடியாது என்றும் —

தொழில் நுட்பக் கோளாறு காரணமாக இயந்திரத்தில் தீப்பிடித்தாலும் அதன் இறக்கைகள் தீப்பிடிக்க முடியாத உலோகத்திலானவை என்றும் அரசியல் செய்தியாளர் தமது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## "ஹபரண" கப்பல் மீண்டும் மாவுடன் வரும்

வடமராட்சி, மே. 11 மா இறக்கி முடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஹபரண கப்பல் பருத்தித்துறையிலிருந்து நேற்று புறப்பட்டுச் சென்றது.

இக்கப்பல் மீண்டும் திருகோணமலை சென்று மற்றொரு தொகுதி மாவை ஏற்றிக் கொண்டு மீண்டும் பருத்தித்துறை வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை —

பருத்தித்துறையிலிருந்து நேற்று திருமலை சென்ற "சிடான்ஸ்" கப்பலில் வெளியூர்களுக்கான 14 தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்பட்டன. (ஒ-173)

## நரோமாவுக்கு ஆசனப் பதிவு

யாழ்ப்பாணம், மே. 11 ஜூன் முதலாம் திகதி "நரோமா" கப்பலில் பயணம் செய்வதற்கு ஏற்கனவே ஆசனப்பதிவு செய்தவர்கள் நாளை வெள்ளிக்கிழமை செயலகத்தில் கப்பல் பயணக் கட்டணத்தை செலுத்தலாம் என்று யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-4]

## கொழும்பில் கைக்குண்டு தாக்குதல்

கொழும்பு, மே 11 கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் கைக்குண்டு வீசப்பட்டதில் பொதுமக்களில் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளானார். மற்றும் இருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

புறக்கோட்டை ஐந்தாம் குறுக்குத் தெருவில் தனிப்பட்ட விரோதம் காரணமாகவே ஒருவர் மீது குண்டு வீசப்பட்டது. இதனால் அவர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்.

குண்டை வீசியவர் என சந்தேகிக்கப்படும் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர். 1>-7

---

**யாழ். பல்கலைக்....**

[5ஆம் பக்கத் தொடர்ச்சி)

அநாகரிகச் செயல்

மேலும், மாணவர்களின் நலனுக்காக, சுயநலம் பார்க்காது நம்மத்தியில் நின்று உழைக்கும்— அர்ப்பணமிக்க – ஆசிரியர்கள் மற்றும் நிபுணர்களின் நல்லெண்ணத்தை மருத்துவ மாணவர் ஒன்றியத்தின்— பீடத்தின் தலைவைப் பூட்டும்— அநாகரிகமான தற்போதைய நடவடிக்கை முற்றாகப் பாதித்திருக்கிறது.

எதிர்காலத்தில் இங்கு வந்து பணிபுரிய எண்ணும் பணியாளர்களையும் பின்னிற்க வைப்பதாக அவர்கள் நடவடிக்கை அமைந்துள்ளது.

---

**பிரிகேடியர்- -**

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அமைச்சர், சரத் முனசிங்காவைக் கடுமையான வார்த்தைகளால் கண்டித்தார். முதல் விமானம் இயந்திரக் கோளாறு காரணமாகவே வீழ்ந்து நொருங்கியது என்பதை மக்களுக்கு ஒப்புவிக்கும் வகையில் விமானப்படைத் தளபதியின் விசேட நேரடி உரையாடல் ஒன்றை ரூபவாஹினியில் ஒளிபரப்ப உடனடியாக ஒழுங்கு செய்யப்பட்டது.

எவ்வாறாயினும் இரு விமானங்களையும் தாங்கள் ஏவுகணைகளாலேயே சுட்டு வீழ்த்தினர் என்ற விடுதலைப் புலிகளின் கூற்று உலகெங்கும் எட்டிவிட்டது இவ்வாறு "யுக்திய" தெரிவித்துள்ளது. (ஒ-10)

---

**லங்கா முடித- -**

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அரிசி, சீனி, பருப்பு ஆகியவை உட்பட 2 ஆயிரத்து 810 மெற்றிக்தொன் பொருள்களை இக்கப்பல் ஏற்றி வந்திருந்த போதும் —

நேற்று பருத்தித்துறைக்கு வந்த கப்பலில் 2 ஆயிரத்து 282 மெற்றிக்தொன் பொருள்களே இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

ஒ-3-4-171)

---

**அமெரிக்கா ..**

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஐக்கட்சியைச்சேர்ந்த அமைச்சர் பேர்னாட் சொய்ஸா இதனைக் கடுமையாக எதிர்த்தார். இனப்பிரச்சினைத்தீர்வில் அமெரிக்காவின் பங்கு இருக்கக்கூடாது என்று பேர்னாட் சொய்ஸா அமைச்சரவைக் கூட்டத்தில் கேட்டுக் கொண்டார்.

இந்த அவசர அமைச்சரவைக் கூட்டத்துக்கு சில குறிப்பிட்ட அமைச்சர்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

# ஆயர் கென்னத்தை யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு அரசு முயற்சியாம்

## ஆனால் அவர் தயக்கம் காட்டுகிறார்

விடுதலைப் புலிகளுக்கும் அரசு தரப்பினருக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கத்துடன், சில யோசனைகளுடன், ஆங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்க அரசாங்கம் முயற்சிப்பதாக 'சண்டே டைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

எனினும் தற்போதைய நிலையில் யாழ்ப்பாணம் செல்வதற்கு ஆயர் கென்னத் பெர்னாண்டோ தயக்கம் காட்டுவதாகவும்—

ஆயர் கென்னத் பெனாண்டோவுடன் நெருக்கமானவர்கள் அவரை யாழ்ப்பாணம் செல்லும்படி வலியுறுத்தி வருகின்றனர் என்றும் — மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் யாழ்மறை மாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் கொழும்பில் ஆங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோவுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ். ஆயர் கொழும்பு வந்திருந்தார்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு மத்தியிலும் ஜனாதிபதி சந்திரிகா தமது சமாதான முயற்சிகளை இன்றும் கைவிடவில்லை என்று 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையின் அரசியல் செய்தியாளர் தெரிவித்துள்ளார். (இ)

# பாணின் விலை குறித்து முடிவு செய்ய திட்டப்பணிப்பாளர் தலைமையில் குழு

## ஒருவார காலத்தில் முடிவு தெரியும்

யாழ்ப்பாணம், மே 11 பாண் விலையை அதிகரிப்பதா, இல்லையா என்பது குறித்து முடிவெடுக்க திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு ஒரு வார காலத்தில் தனது முடிவைத் தெரிவிக்கும்.

யாழ் மாவட்ட வெதுப்பகங்கள் எதிர்நோக்கும் விலைப் பிரச்சினை தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் மாவட்ட வெதுப்பக உரிமையாளர்கள் சங்கமும், வெதுப்பகங்களை நடத்தி வரும் ப. நோ. கூ. சங்கங்களும் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகத்தை தனித்தனியாகச் சந்தித்திருந்தனர்.

யாழ் மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் பாணை தற்போதைய விலையில் விற்க முடியாதிருப்பதாகவும் —

தற்போதைய விலையில் விற்பது நஷ்டம் என்றும் — தெரிவித்திருந்தனர். அதற்கான காரணங்களையும் அவர்கள் தெரிவித்தனர்.

வெதுப்பகங்களை நடத்தும் ப.நோ கூ.ச. பிரதிநிதிகள், பாணை தற்போதைய விலையிலேயே விற்பதற்குத் தாம் தயார் என்றும் விலை அதிகரிப்புத் தேவையில்லை என்றும் தெரிவித்தனர். அதற்கான காரணங்களையும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்தே திட்டப் பணிப்பாளர் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்தில் உள்ள வெதுப்பகங்களில் பெரும்பாலானவை மூன்றுக்கு உட்பட்ட மூடை மாவிலேயே பாண் உற்பத்தி செய்வதாலேயே தற்போதைய விலையில் விற்க முடியாதிருப்பதாகவும் —

மூன்றுக்கு மேற்பட்ட மூடை மாவில் பாண் உற்பத்தி செய்தால் மட்டுமே நஷ்டத்தை தவிர்க்க முடியும் என்றும் — யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-4)

## அம்பாறையில் சிறியளவு பூமி அதிர்ச்சி

யாழ்ப்பாணம், மே 11 அம்பாறை மாவட்டத்தில் நேற்றுப் பகல் 11-15 மணியளவில் சிறியளவு பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அம்பாறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்குச் சமீபமாக ஏற்பட்ட பூமி அதிர்ச்சியின் போது சில கட்டடங்கள் சிறியளவில் அதிர்வடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-6]

## பென்ஷன் வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், மே. 11 யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கான இம்மாத பென்ஷன் வவுச்சர்கள் யாழ். செயலகத்துக்கு நேற்று வந்து சேர்ந்தன [ஒ-4]

---

**சமாதானத்---**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாங்குதல் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கின்றனர். இதனால் இராணுவத்தினருக்கு செலவாக்கு கூடியுள்ளது என்று கருதலாம் —

இராணுவத்தினர் விடுதலைப் புலிகளிடம் இராணுவரீதியில் சிக்கிக் கொண்டனர் என்று கூறுவதில் தப்பில்லை—

பூநகரியில் உள்ள இராணுவத்தினரை மீட்பதற்காகவே அப்பகுதியில் விமானத் தாக்குதல் தொடங்கப்பட்டிருக்கலாம். மட்டுப்படுத்தப்பட்ட வான்வழி கடல் வழி தாக்குதல்கள் மூலம் பூநகரி சிப்பாய்களைக் காப்பாற்றுவதற்கு இராணுவம் திட்டம் போட்டிருக்கலாம்.

விடுதலைப் புலிகள் விமானங்கள் மீது நடத்திய ஏவுகணைத் தாக்குதல் புதிய திருப்பத்தைக் கொண்டு வந்துள்ளது என்பதனை மறந்து விடமுடியாது — என்றும் இக்பால் அத்தாஸ் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார். (க)

---

**தீர்வு திட்டத்தை....**

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

முறை கூறி தமிழர்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள். சந்திரிகா துணிச்சலாக அரசியல் தீர்வை வெளியிடாவிட்டால் பரசினை தீரப்போவதில்லை என சந்திரிகாவுடன் பேச்சு நடத்திய தமிழ்க் கட்சிகள் தமது விரக்தியை வெளியிட்டன.

சந்திரிகாவுடனான நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ. பி. டி. பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள்.

இந்தக் கட்சியின் பிரதிநிதிகள் மீண்டும் அடுத்த வாரமளவில் சந்திரிகாவைச் சந்திக்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

### விடுதலைப்புலிகள் என்று கூறி

## தமிழ் தம்பதியரை கைது செய்ய முயன்ற ஆசாமி

கொழும்பு, மே. 11 தனியார் விடுதி ஒன்றில் தங்கியிருந்த தமிழ் தம்பதிகளை விடுதலைப் புலிகள் என்று கூறி கைது செய்ய முயன்ற நபர் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகத்துக்கு இடமான வகையில், தம்மை பொலீஸ் இன்ஸ்பெக்டர் எனக் கூறிய இந்நபர் கொள்ளுப்பிட்டியில் உள்ள தனியார் விடுதியில் தங்கியிருந்த தமிழ் தம்பதியரை "கைது" செய்ய முயன்றதாகவும் —

சந்தேகத்தின் பேரில் விடுதி உரிமையாளர் கொள்ளுப்பிட்டி பொலீஸாருக்கு அறிவித்தார் எனவும் —

உடனடியாக அவ்விடத்துக்கு விரைந்த பொலீஸார் இந்நபரை கைது செய்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட நபர் பொலீஸ் சேவையிலிருந்து விலக்கப்பட்ட முன்னாள் சப் இன்ஸ்பெக்டர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-14)

### பேகின போணி ரத்தான விவகாரம்

## அமைச்சர் பேர்னாட்டின் ராஜினாமா முயற்சி!

கொழும்பு, மே. 11 அரசாங்கம் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் மேதின ஊர்வலத்தை ரத்துச் செய்ததை ஆட்சேபித்து பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் உள்ள லங்கா சமசமாஜக் கட்சி அமைச்சர் பேர்னாட் சொய்ஸா அமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்ய இருந்தார்.

எனினும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இதற்கு அவரை அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

முதலில் அரசாங்கம் மேதின ஊர்வலத்தையும் கூட்டத்தையும் ரத்துச்செய்ய இருந்தது பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கத் தலைவரும் பிரதி அமைச்சருமான அலவி மௌலானாவுடன் கலந்தாலோசித்து விட்டு ஊர்வலத்தை மட்டும் ரத்துச் செய்ய முடிவு செய்தது.

அமைச்சர் பேர்னாட் சொய்ஸா ஊர்வலத்தை ரத்துச் செய்யும் முடிவைக் கடுமையாக எதிர்த்தார்.

ராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பிப்பதற்காக சந்திரிகாவைச் சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கித் தரும்படி தொலைபேசியில் அவர் கேட்டுக் கொண்டார்.

அப்பொழுது ஜனாதிபதி சந்திரிகா—

அங்கிள் [பேர்னாட் உங்களை எங்களுக்குத்தேவை என்று— கூறினாராம்.

இக்கட்டான இன்றைய சூழ்நிலையில் பொறுமையைக் கடைப்பிடிக்கும் படியும் அவர் கேட்டுக் கொண்டாராம்.

## திருமலையில் நிர்வாகத்தை சீர்குலைக்கத் திட்டமாம்

கொழும்பு மே 11 திருகோணமலை மாவட்டத்தில் அரசாங்கத்தின் நிர்வாகத்தை சீர்குலைக்கும் திட்டம் ஒன்றை விடுதலைப் புலிகள் மேற்கொள்ள இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களுக்கு தகவல்கள் கிடைத்துள்ளனவாம்.

அத்தகவல்களின்படி தற்கொலைப் படையைச் சேர்ந்த மூவர் திருகோணமலைக்கு வந்துள்ளனர் என்றும் —

இவர்களது நோக்கம் ஹபரண — திருகோணமலை போக்குவரத்தை தடை செய்வதே என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஹபரண — திருமலை வீதியில் அல்லது அதனுடன் இணைந்த வேறு வீதியில் உள்ள [பாலம் ஒன்றை குண்டு வைத்து தகர்க்க புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## ஐ. நா. பெண்கள் மாநாடு

பீகிங், மே. 11 நான்காவது ஐ. நா. பெண்கள் மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் சீனாவின் தலைநகரான பீகிங்கில் நடைபெறவுள்ளது.

உலகின் சகல பாகங்களிலிருந்தும் 30 ஆயிரம் பெண்கள் அதில் கலந்து கொள்வார்கள். (க)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11 - 05 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org